بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 49 & 50

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ஜமாதில் அவ்வல் 13-20★ஹிஜ்ரி ஷம்ஸி 1401 - ஃபத்ஹ் 08-15 ★ 08-15 டிசம்பர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَاِمَّا يَنۡزَغَنَّكَ مِنَ الشَّيۡطٰنِ

نَزۡغٌ فَاسۡتَعِذۡ بِاللّٰهِ ؕ

اِنَّهٗ سَمِيۡعٌ عَلِيۡمٌ ○

**பொருள் :**

ஷைத்தானிடமிருந்து ஏதேனும் தீய தூண்டுதல் உம்மைத் தாக்கினால், நீர் அல்லாஹ்விடம் அடைக்கலம் கோருவீராக. நிச்சயமாக அவன் நன்கு கேட்பவனும், நன்கு அறிபவனுமாவான்.

(அல் அஃராஃப்:171)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நேர்வழி மற்றும் தர்பிய்யத் வழங்குவது என்பது உண்மையான இறைவனின் பணியாகும் என்னை பொருத்த வரை குழந்தைகளை அடிப்பது ஷிர்க்கில் அடங்கும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### குழந்தைகளை அடிப்பது ஷிர்க்கில் அடங்கும்

ஒருமுறை ஒரு நண்பர் தனது குழந்தையை அடித்து விட்டார். அதனால் அன்னார் (அலை) மிகவும் வேதனை அடைந்தார்கள். அந்த நபரை அழைத்து மிகவும் வேதனையுடன் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கூறினார்கள்:

என்னை பொருத்த வரை குழந்தைகளை இவ்வாறு அடிப்பது ஷிர்க்கில் அடங்கும். (இவ்வாறு) அடிக்கும் தீய இயல்பு படைத்த நபர் ஒருவகையில் நேர்வழி மற்றும் தர்பிய்யத்தில் தம்மை பங்குதாரராக ஆக்கிக் கொள்கின்றார். ஓர் ஆத்திரம் கொண்ட நபர் ஒரு விஷயத்தில் தண்டனை கொடுக்கும்போது கோபத்தில் முன்னேறி, முன்னேறி ஓர் எதிரியைப் போன்ற நிலையை மேற்கொண்டு விடுகின்றார். மேலும் குற்றத்தின் எல்லையிலிருந்து வெகு தொலைவில் வரம்பு மீறி சென்று விடுகிறார். ஒரு நபர் சுயமரியாதை கொண்டவராகவும், தனது நஃப்ஸை கட்டுப்பாட்டில் வைப்பவராகவும், முழுமையான பொறுமை கொண்டவராகவும், சகிப்புத்தன்மை கொண்டவராகவும், அமைதி நிறைந்தவராகவும் இருந்தால் தகுந்த நேரத்தில் ஓரளவிற்கு குழந்தைக்கு தண்டனை கொடுக்கவோ அல்லது பாராமுகமாக இருக்கவோ உரிமை அவருக்கு உள்ளது. ஆனால் கோபவெறி கொண்டவரும், இழிவானவரும், குறை மதி கொண்டவரும் ஒருபோதும் குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்குவதற்கு தண்டனை கொடுக்க தகுதி வாய்ந்தவர் கிடையாது. தண்டனை கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. அந்தோ! அவர்கள் துஆக்கள் செய்வதில் ஈடுபட வேண்டுமே!

குழந்தைகளுக்காக வேதனையுடன் கூடிய உள்ளத்துடன் துஆக்கள் செய்வதில் அவர்கள் முயற்சிகள் செய்ய வேண்டுமே! குறிப்பாக பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக செய்கின்ற துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது.

### ஹுஸூர் அவர்களின் சில துஆக்கள்

கூறினார்கள்: நான் தினமும் சில துஆக்களை தவறாமல் செய்து வருகின்றேன். முதலாவதாக, கண்ணிய மிக்க இறைவன் தனது கண்ணியம் மற்றும் கம்பீரத்தை வெளிப்படுத்தும் பணிகளை என்னைக் கொண்டு செய்ய வைக்க வேண்டும். மேலும், அவனது திருப்தியில் நான் முழுமையாக திருப்தி கொள்வதற்கு எனக்கு நற்பேறு வழங்க வேண்டும் என்று நான் எனது நஃப்ஸிற்காக துஆ செய்கின்றேன்.

இரண்டாவதாக, எனது குடும்பத்தினருக்காக துஆ செய்கிறேன். அதாவது, அவர்கள் மூலம் கண்களுக்கு குளிர்ச்சி கிடைக்க வேண்டும். மேலும், அவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்குரிய வழிகளில் நடக்க வேண்டும் எனவும் நான் துஆ செய்கின்றேன்.

மூன்றாவதாக, எனது பிள்ளைகளுக்காக துஆ வேண்டுகிறேன். அவர்கள் அனைவரும் மார்க்கத்தின் தொண்டர்களாக ஆக வேண்டும் என நான் துஆ செய்கிறேன்.

நான்காவதாக, நான் எனது தூய நண்பர்களுக்காக ஒவ்வொருவரின் பெயரைக் குறிப்பிட்டு (துஆ செய்கின்றேன்).

ஐந்தாவதாக, இந்த ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர்களுக்காக (துஆ செய்கின்றேன்). அவர்கள் நான் அறிந்தவர்களாக இருந்தாலும் சரி! அல்லது அறியாதவர்களாக இருந்தாலும் சரியே! (அவர்கள் அனைவருக்காகவும் நான் துஆ செய்கின்றேன்).

### பிள்ளைகளின் தர்பிய்யத்

கூறினார்கள்: தனது பராமரிப்பின் கீழ் இருப்பவர்களிடம் இருந்து ஒரு நிமிடம் கூட கவனமற்றவராக இருக்கின்ற அந்த நபருக்கு பெரும் அரியணையில் அமர்வதும், பீர்மார்களாக ஆகுவதும் ஹராம் ஆகும். நேர்வழியும், தர்பிய்யத்தும் உண்மையான இறைவனின் பணியாகும். கடுமையாக பின் தொடர்வதும், ஒரு விவகாரத்தை வலியுறுத்துவதில் எல்லை கடந்துவிடுவதும் அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் குழந்தையை தடுப்பதும், கண்டிப்பதும் ஒருவகையில் நாமே நேர்வழியின் எஜமானராக இருக்கின்றோம். மேலும் நாம் நமது விருப்பப்படி அவரை ஒரு வழியில் கொண்டு வந்துவிடுவோம் என்பதையே வெளிப்படுத்துகிறது. இது ஒரு வகையான மறைமுக ஷிர்க் ஆகும். இதிலிருந்து நமது ஜமாஅத்தினர் விலகி இருக்க வேண்டும்.

அன்னார் மிக கண்டிப்புடன் கூறினார்கள். மேலும், எழுத்துப்பூர்வமாக எழுதி அனுப்பியும் இந்த விஷயத்தை வழிகாட்டியுள்ளார்கள்: அதாவது, நமது பள்ளிக்கூடங்களில் (பிள்ளைகளை) அடிக்கின்ற பழக்கம் கொண்ட ஆசிரியரை மேலும் அவ்வாறு தண்டிக்கும் செயலில் இருந்து விலகாதவரை உடனடியாக பணி நீக்கம் செய்து விடுங்கள்.

கூறினார்கள்: நாம் எமது பிள்ளைகளுக்காக துஆ செய்கின்றோம். மேலும் பொதுவான சட்டங்களையும், நல்லொழுக்க போதனைகளையும் பின்பற்றச் செய்கின்றோம். இதை விட அதிகமாக வேறு ஒன்றும் இல்லை. பின்னர் தமது முழு நம்பிக்கையையும் இறைவன் மீது வைக்கின்றோம். ஒருவரிடம் எந்த அளவிற்கு நற்பேறின் விதை இருக்குமோ அது உரிய நேரத்தில் பசுமையாகிவிடும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 420, பதிப்பு காதியான்-2018)

## நபிமொழி

**செல்வத்தை (இறை வழியில்) செலவு செய்வதன் அருட்கள்**

(1443) ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கருமிக்கும், செலவு செய்பவருக்கும் உதாரணமாவது, மார்பிலிருந்து கழுத்து வரை இரும்பாலான அங்கிகளணிந்த இரண்டு மனிதர்களைப் போன்றதாகும். செலவு செய்பவர், (இறைவழியில்) செலவு செய்யும்போதெல்லாம் அவரின் அங்கி விரிவடைகின்றது. (கூறினார்கள்) அது விரல்களை மறைத்து அவரது கால்களின் தடங்களை அழித்து விடும் அளவுக்கு விரிவடைகின்றது.

கருமி செலவு செய்யக் கூடாது என்று எண்ணும்போதெல்லாம் அந்த அங்கியின் ஒவ்வொரு வளையமும் அதற்குரிய இடத்தை நெருக்கும். அவர் அதை விரிக்க முயன்றாலும் அது விரியாது.

(புகாரி தொகுதி 4, பாடம்-ஸகாத், காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தஹ்ரீகே ஜதீதின் 88 வது ஆண்டின் வெற்றிகரமான, அருளுக்குரிய நிறைவடைதல் மற்றும் 89வது ஆண்டின் துவக்கம் குறித்த அறிவிப்பு**

**பொருள் தியாகம் செய்யக் கூடியவர்கள் தமது ஆன்மீக நிலையின் மீதும் பார்வை வைப்பது அவசியமாகும் அப்போதுதான் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு உண்மையான வாரிசுகளாக ஆக முடியும்**

**நீங்கள் இறை வழியில் செலவு செய்கின்ற செல்வங்களுக்கு பகரமாக அல்லாஹ் இவ்வுலகிலும், மறுமையிலும் அருட்கொடைகளை வழங்குகின்றான். அல்லாஹ் கடன் வைப்பதில்லை என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்திவிட்டான்.**

**இன்று மார்க்க நோக்கங்களை முழுமை செய்வதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அனுப்பியுள்ளான். மேலும் அன்னார் (அலை) மூலமாக இன்று உலகில் இஸ்லாமியப் பிரச்சாரம் மற்றும் மனித இனத் தொண்டு போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**முழு உலகிலும் இந்த ஆண்டும் ஜெர்மனி ஜமாஅத் (தஹ்ரீகே ஜதீத் சந்தாவில்) முதலிடத்தில் உள்ளது**

**அல்லாஹ்வின் அருளினால் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பின் கீழ் ஜமாஅத்திற்கு 16.4 பவுண்ட்கள் பொருள் தியாகம் செய்வதற்கான நற்பேறு கிடைத்துள்ளது. இது கடந்த வருடத்தைக் காட்டிலும் பதினோறு இலட்சம் பவுண்ட்கள் அதிகம் ஆகும்**

**பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தூய அஹ்மதிகளின் பொருள் தியாகத்திற்கான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

**அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கே-வின் வரலாற்றுத் துறையின் வலை தளம் (history.ahmadiyya.uk) துவக்கம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 04 நவம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு நுபுவ்வத் மாதம் **04ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ ۞

இன்று நவம்பர் மாதத்தின் முதல் ஜுமுஆ ஆகும். நவம்பர் மாதத்தின் முதல் ஜுமுஆவில் வழக்கமாக தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு செய்யப்படுகின்றது. மேலும், கடந்த வருடத்தில் அல்லாஹ் பொழிந்த அவனது அருட்களின் மழையைக் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றது. எனவே இந்த அடிப்படையில் நான் இன்று சிலவற்றைக் கூறுவேன். ஒவ்வொரு பணியை செய்வதற்கும், அதன் செலவீனங்களை முழுமை செய்வதற்கும் செல்வத்தின் தேவை இருக்கின்றது என்பதை முதலில் நினைவிற் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை விளக்கியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஒவ்வொரு நபியும் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செல்வத்தை கொடுக்கும்படி கூறியுள்ளார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 233, பதிப்பு-1984)

மேலும் திருக்குர்ஆனிலும் பல்வேறு கோணங்கள் மற்றும், அம்சங்களில் நம்பிக்கையாளர்களுக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. மார்க்கத்திற்காக நீங்கள் செய்கின்ற தியாகங்கள், உங்களது செல்வத்தை நீங்கள் செலவு செய்வது ஆகிய விஷயங்களுக்கு பகரமாக இந்த உலகிலும், மறுமையிலும் அல்லாஹ் அருட்கொடைகளை வழங்குகின்றான். அல்லாஹ் கடன் வைப்பதில்லை என்ற விஷயத்தை அல்லாஹ் தெளிவுபடுத்திவிட்டான்.

உதாரணமாக, அவன் எவ்வாறு அருளுகிறான். மேலும் எந்த அளவு அருளுகிறான் என்பதைக் குறித்து அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
كَمَثَلِ حَبَّةٍ أَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ
مِّائَةُ حَبَّةٍ ۗ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ۗ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

பொருள்: தங்கள் செல்வத்தை இறை வழியில் செலவிடுகின்றவருக்கு, ஒரு தானியம் உதாரணமாகும். அத்தானியம் ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். தான் நாடியவருக்கு அல்லாஹ் அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (அல்பக்ரா:262)

எனவே தூய மனதுடன் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யக்கூடிய நம்பிக்கையாளர்களின் உதாரணம் இதுவே ஆகும். அல்லாஹ் அவர்களின் கடனை (பாக்கி) வைப்பதில்லை. மாறாக, அவர்களுக்கு இவ்வுலகிலும் அருளுகின்றான். மேலும், மறுமையிலும் அருளுகின்றான். இக்காலத்தில், அல்லாஹ் மார்க்கத்தை பரப்புவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அனுப்பியுள்ளான். அன்னார் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் மீதும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. மார்க்கத்தை பரப்புவதற்காகவும், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காகவும் உலகை ஏக இறைவனுக்கு முன்னால் குனியச் செய்வதற்காகவும் தங்களது கடமையை செலுத்த வேண்டும். அவர்கள் அவ்வாறு தூய்மையுடன் செய்தால் அவர்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கும், அருட்கொடைகளுக்கும் வாரிசுகளாக ஆகிவிடுவார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை, நோன்பு மற்றும் அல்லாஹ்வை நினைவுகூருதல் ஆகியவை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யப்பட்ட செல்வத்தை எழுநூறு மடங்கு அதிகரித்துவிடுகிறது. (சுனன் அபீ தாவூத், பாடம்-அல்ஜிஹாத், ஹதீஸ் எண்: 2498)

அதாவது, நீங்கள் செய்கின்ற பொருள் தியாகத்துடன் இந்த விஷயங்களும் அவசியமாகும். ஆக, இந்த ஹதீஸில் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் சித்திரம் வரையப்பட்டுள்ளது. ஒரு நம்பிக்கையாளர் இதை மட்டுமே போதுமானதாக கருதக் கூடாது. அதாவது, பொருள் தியாகம் மட்டுமே செய்துவிட்டு, நான் இவ்வளவு பொருள் தியாகம் செய்துள்ளேன். மேலும், இறைவனின் கூற்றிற்கேற்ப எனக்கு எழுநூறு மடங்கு அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று அவர் அல்லாஹ்வை பார்த்து கூறுபவராக இருக்கக் கூடாது. அது தவறு. மாறாக, அவர் அத்துடன் தனது இறை வணக்கங்களின் தரத்தையும் உயர்த்த வேண்டும். தனது நஃப்ஸின் நிலையையும் மேம்படுத்த வேண்டும். அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலம் தனது நாவுகளை ஈரமாக வைக்க வேண்டும். வீணானவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். மேலும், தூய உள்ளத்துடன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமே பொருள் தியாகம் செய்ய வேண்டும். பின்னர், சில முறை மனிதன் வியப்பில்

உறைந்து விடும் அளவில் அல்லாஹ் அருளுகின்றான்.

சிலநேரம், அல்லாஹ் நமது சிறிய அமல்களையும் கூட ஒப்புக் கொண்டவாறு ஆச்சரியப்படும் வகையில் அருளுகின்றான். இவ்வாறு அருளுவது அல்லாஹ்வின் சிறப்பான கருணையாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் இருப்பின் மீது ஈமான் மேலும் அதிகரிக்கின்றது. அவனது கூற்றுகளில் முன்னரை விட நம்பிக்கை அதிகரித்து விடுகின்றது. ஆயினும், நான் இவ்வளவு தியாகம் செய்துள்ளேன். மற்ற அமல்களை நான் செய்யாவிட்டாலும், அல்லாஹ் நிச்சயமாக அருட்கொடைகளை வழங்குவான் என்று இந்த விஷயத்தின் மீது மட்டும் எந்நிலையிலும் மகிழ்ச்சி அடைந்து விடக்கூடாது. எனவே, பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் தங்களது ஆன்மீக நிலைகளின் பக்கமும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு உண்மையான வாரிசுகளாக ஆவார்கள்.

அல்லாஹ் எப்போதும் உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றான். அதற்கான எண்ணற்ற உதாரணங்கள் ஜமாஅத்தில் உள்ளன. நாம் முன்னவர்களின் உதாரணத்தை மட்டும் வழங்கவில்லை. அல்லாஹ் அருளுவான் என்று அவர்களுக்கு எந்த அளவிற்கு நம்பிக்கை இருந்தது என்பதற்கான முன்னவர்களின் உதாரணங்களும் உள்ளன. நிகழ்கால உதாரணங்களும் உள்ளன.

பழைய காலத்தில் முன்னவர்களின் உதாரணங்களில் ஹஸ்ரத் ராபிஆஃ பஸரி (ரஹ்) அவர்களின் ஒரு சம்பவமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு (அல்லாஹ்வின் மீது) எந்த அளவிற்கு முழுமையான நம்பிக்கை இருந்துள்ளது!

ஒருமுறை அன்னார் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். அப்போது இருபது விருந்தினர்கள் வந்துவிட்டனர். மேலும் வீட்டில் இரண்டு ரொட்டிகள் மட்டுமே இருந்தன. அந்நிலையில், இந்த இரண்டு ரொட்டிகளையும் வெளியில் சென்று ஏழை ஒருவருக்கு கொடுத்து விட்டு வாருங்கள் என அன்னார் தமது பணிப் பெண்ணிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கைக்கு இது ஒரு விநோதமான கோணம் ஆகும்.

பணிப் பெண் மிகவும் வருத்தத்திற்கு ஆளானார். இந்த நல்லடியார்களும் கூட விநோதமான அறிவிலிகளாக இருக்கின்றனர். வீட்டிற்கு விருந்தினர்கள் வந்துள்ளனர். வீட்டில் இருப்பதோ சிறிது ரொட்டியே! ஆனால் (அதையும்) ஏழைகளுக்கு கொடுத்து விட்டு வாருங்கள் என்று இவர் கூறுகின்றாரே! என பணிப் பெண் எண்ணினார்.

தற்போது அவர் அதை சிந்தித்துக் கொண்டிருந்தார். மேலும் அவர் வெளியில் புறப்பட்டார் அல்லது கொடுத்து விட்டு வந்தார். அந்நிலையில், சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியில் இருந்து ஒரு குரல் வந்தது. மேலும், ஒரு பெண்மணி வந்திருந்தார். ஒரு செல்வச் சீமாட்டி அவரை அனுப்பியிருந்தார். அவர் பதினெட்டு ரொட்டிகளை எடுத்துக் கொண்டு வந்திருந்தார். இவை எனது ரொட்டிகள் அல்ல என்று ஹஸ்ரத் ராபிஆஃ பஸரி (ரஹ்) கூறினார். இவற்றை அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்று அவர் மிகவும் அழுத்தமாக கூறினார். இல்லை. இவை என்னுடையது அல்ல! என்று அன்னார் கூறினார்கள். பின்னர், வைத்து விட்(டு) (செல்லு)ங்கள் என்று பணிப் பெண் கூறினார். எவ்வாறு இருப்பினும், சிறிது நேரத்திற்குப் பிறகு செல்வச் சீமாட்டியான அண்டை வீட்டுப் பெண்மணி வந்தார்.

நீ எங்கே சென்று விட்டாய்? ராபிஆ பஸரியா அவர்களின் வீட்டிற்கு இருபது ரொட்டிகளை அல்லவா எடுத்துச் செல்ல வேண்டும்! இவை (பதினெட்டு ரொட்டிகள்) அன்னாருடையது அல்ல. இதனை நான் வேறு ஒருவருக்கு அல்லவா அனுப்பினேன்? என்று அவர் தனது பணிப் பெண்ணிடம் கூறினார்.

ராபிஆ பஸரிய்யா கூறினார்கள்: நான் (தருமமாக இரண்டு) ரொட்டிகளை கொடுத்திருந்தேன். அப்போது இதனை அல்லாஹ் பத்து மடங்காக அதிகரித்து எனக்கு அனுப்பிவிடுவான் என்று நான் அல்லாஹ்விடம் வணிகம் செய்திருந்தேன். எனவே இரண்டிற்கு பகரமாக இருபது ரொட்டிகள் வரவேண்டியதிருந்தது.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களையும் ஆதாரமாக கொடுத்துள்ளார்கள். ஆதாரங்களை கொடுத்தவாறு அன்னார் (ரலி) கூறினார்கள்:

(திருக்குர்ஆனில்) சில இடங்களில் ஒன்றிற்கு பகரமாக பத்து (மடங்கு) என்றும், வேறு சில இடங்களில் ஒன்றுக்கு பகரமாக எழுநூறு (மடங்கு) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த நற்கூலி என்பது இடம், பொருளுக்கு ஏற்ப ஆகும். அதாவது, நன்மை எந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறு செய்யப்படுகிறது? மேலும் எவ்வளவு தியாகம் செய்யப்படுகிறது? மேலும் தியாகம் செய்யக் கூடியவர் எந்த எல்லை வரை தியாகம் செய்கின்றார்? என்பதையெல்லாம் சார்ந்தது.

நான் கூறியதுபோன்று ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ராபிஆஃ பஸரியாவின் சம்பவத்தை எடுத்துரைத்து, அல்லாஹ் இவ்வாறு அருளுகின்றான். ஆனால், நீங்கள் அல்லாஹ்வை சோதித்துப் பார்க்கும் எண்ணத்துடன் எல்லா நேரமும் இதை செய்து கொண்டிருக்கக் கூடாது என்று அன்னார் (ரலி) கூறினார்கள். (ஹகாயிகுல் ஃபுர்கான், தொகுதி 1, பக்கம் 420-421)

அல்லாஹ்வை சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இதை செய்வதை தொடங்கிவிடக் கூடாது. ஆயினும், அல்லாஹ்விற்காக களங்கமற்றவர்களாக திகழ்ந்து சிலமுறை இவ்வாறும் தியாகம் செய்தால் அல்லாஹ்வும் அருளுவான். எனவே எந்த மக்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக செலவிடுகின்றார்களோ மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக கொடுக்கின்றார்களோ அவர்கள் உண்மையான தியாகம் செய்யக் கூடியவர்கள் ஆவர். ஹஸ்ரத் ராபிஆஃ பஸரியாவின் உதாரணம் தனிப்பட்ட விருந்தினர்களுடையதாக தெரியலாம். ஆனால் அன்னாரிடமும் மக்கள் மார்க்க நோக்கத்திற்காகவே சென்று வந்தனர். எவ்வாறு இருப்பினும், இன்று மார்க்க நோக்கங்களை முழுமை செய்வதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அனுப்பியுள்ளான். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் மூலமாக இன்று உலகில் இஸ்லாமியப் பிரச்சாரம் மற்றும் மனித இனத் தொண்டிற்கான பணி நடைபெற்று வருகிறது.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் ஒவ்வொரு ஆண்டும் பல மில்லியன் பவுண்ட்கள் புத்தகங்கள் வெளியீடு, பள்ளிவாசல்களின் கட்டுமானம், மிஷன் ஹவுஸ்களின் கட்டுமானம் மற்றும் ஏனைய திட்டங்களுக்காக செலவிடுகின்றது. ஐரோப்பா மற்றும் முன்னேற்றம் அடைந்த நாடுகளின் பெரும்பாலான தொகை ஆஃப்ரிக்கா, பாரத் மற்றும் ஏனைய ஏழை நாடுகளில் செலவாகின்றது. தமது நாடுகளின் செலவீனங்கள் போக, இந்த மக்கள் மற்ற நாடுகளின் இந்த நோக்கங்களுக்காக செலவு செய்து வருகின்றனர். தற்போது பணிகள் மிகவும் விரிவடைந்துவிட்டன. பொருளாதார நிலைமைகள் சீர்கெட்டு இருந்தபோதிலும் ஜமாஅத் உறுப்பினர்கள் தியாகங்களில் முன்னேறியவாறு இந்த செலவீனங்களை முழுமை செய்து வருகின்றனர். இது அல்லாஹ்வின் சிறப்பான அருள் ஆகும். பின்னர் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு அவன் எவ்வாறு அருளுகின்றான்? என்பதற்கான தனது நடைமுறையின் காட்சியை அல்லாஹ் இன்றும் காட்டுகின்றான்.

தங்களது தேவைகளை தியாகம் செய்து கொண்டு அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்யக்கூடிய ஏழை நாடுகளில் வசிக்கின்றவர்களுக்கும், பணக்கார நாடுகளில் வசிக்கின்றவர்களுக்கும், அனைவருக்கும் தத்தமது சொந்த அனுபவங்கள் உள்ளன. தற்போது நான் சில சம்பவங்களை முன்வைக்கின்றேன். பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொள்கின்றான்? மேலும், நல்லடியார்கள் எந்த உணர்வுடன் தமது தியாகங்களை முன்வைக்கின்றனர் என்பதும் அவற்றிலிருந்து தெரிய வருகின்றது.

அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு சிறிது காலமே ஆகியுள்ள புதிய அஹ்மதிகள் இருக்கின்றனர். அவர்களுக்கும் கூட பொருள் தியாகங்களின் பக்கம் சுயமே கவனம் உருவாகி வருகிறது. ஏனெனில் அவர்களுக்கு அந்த பொருள் தியாகத்தின் ஆன்மா புரிந்துவிட்டது.

லைபீரியாவைச் சேர்ந்த உள்ளூர் முஅல்லிம் முஹம்மது ஜான்சன் இருக்கின்றார். இவர் முதலில் கிறித்தவராக இருந்தார். பின்னர் முஸ்லிம் ஆனார். (மேலும்) முஅல்லிம் ஆகிவிட்டார்.

கூறுகின்றார்: சில மாதங்களுக்கு முன்னர் எங்களது நாட்டில் ஒரு கிராமத்தில் தப்லீக் முயற்சிகளின் விளைவாக ஜமாஅத்தின் செடி நடப்பட்டுள்ளது. அந்த கிராமத்தின் உறுப்பினர்கள் இமாமுடன் சேர்ந்து ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். அது ஒரு சிறிய கிராமம் ஆகும். அங்கு முறையான சாலையும் கூட கிடையாது. மழையின் காரணமாக அங்கு சென்றடைவதும் கடினமாக இருந்தது.

தஹ்ரீகே ஜதீத் சந்தா வசூல் செய்வது தொடர்பாக அவர் கூறுகின்றார்: அடுத்த வருடம் அவர்களிடம் கூறி,அவர்களை தஹ்ரீகே ஜதீத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் வேண்டுமென்றே விட்டு விட்டோம். ஒன்று, அவர்கள் புதிய அஹ்மதிகளாக இருந்தனர். வழிப் பாதையும் மோசமாக இருந்தது. கிராமமும் சிறியதாக இருந்தது.

கூறுகின்றார்கள்: ஒரு நாள் கிராமத்தின் இமாம் அபூபோகாயி சாஹிப் திடீரென டப் மேன் பார்க் மிஷன் ஹவுஸிற்கு வந்து விட்டார்கள். ஜமாஅத்தின் 21 நபர்களின் தஹ்ரீகே ஜதீத் சந்தா உள்ளது என்று கூறி சில தொகையை வந்தவுடன் கொடுத்துவிட்டார்கள்.

அவர்களிடம் சந்தா கொடுக்கும்படி கூறப்பட்டிருக்கவில்லை.

(தஹ்ரீகே ஜதீத் சந்தா குறித்து) உங்களுக்கு எப்படி தெரிய வந்தது? என்று அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அன்னார் (இவ்வாறு ) கூறினார்கள்:

நான் ரேடியோவில் தினமும் ஜமாஅத் நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்டு வருகின்றேன். கடந்த வாரம் தாங்கள் ரேடியோ நிகழ்ச்சியில் தஹ்ரீகே ஜதீதின் அறிமுகத்தை கூறினீர்கள். மேலும், அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தீர்கள். அப்போது நான் இந்த விஷயத்தை எனது ஜமாஅத் உறுப்பினர்கள் மத்தியில் எடுத்துரைத்தேன். எனவே அவர்கள் இந்த சந்தாவைக் கொடுத்தனர்.

எனவே இவ்வாறு அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் சுயமாகவே எண்ணங்களை உருவாக்குகின்றான். உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். தியாகத்தின் ஆன்மாவை உருவாக்கி வருகின்றான்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதினார்கள்:

ஒரு கிராமத்தில் தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் புதிதாக பைஅத் செய்தவர்கள் ஆவர். ஸிஸ்டர் ஃபாதூ சாஹிபா என்ற 57 வயது பெண்மணி 200 டலாசி தொகையை எடுத்து சந்தாவாகக் கொடுத்தார். இது அங்குள்ள கரன்சி ஆகும்.

பெண்மணி கூறினார்: இது ஒன்றே வழியாகும். ஹுஸூர் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்து வந்தது போன்று இன்று இந்த திட்டத்தின் மூலம் எவராலும் உண்மை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை பரப்ப முடியும்.

அவர் கூறினார்: இது எனது கடைசித் தொகையாகும். இதனை குடும்பத்தினருக்கு உணவு வாங்குவதற்காக வைத்திருந்தேன்.

அவர் பணக்கார பெண்மணியாக இருக்கவில்லை. இருநூறு டலாசித் தொகையைக் கொடுத்தார். மேலும், இஸ்லாத்தின் தப்லீக்கிற்காக இந்த தொகையின் தேவை உள்ளதால் நான் கொடுக்கின்றேன். நான் எனது பசியை தாங்கிக் கொள்கின்றேன். மேலும் இந்தத் தொகையை கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார்.

கூறுகின்றார்கள்: தற்போது இந்த விஷயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அந்நிலையில் சுவிட்சர்லாந்தில் உள்ள அன்னாரது மகனின் ஃபோன் வந்தது. நான் இரண்டாயிரம் டலாசி அனுப்பியுள்ளேன் என்று அவர் கூறினார். அப்போது, அந்தப் பெண்மணி அல்லாஹ் எவ்வாறு தம் மீது அருள் செய்தான் என்பதை அந்தக் கூட்டத்தில் அழுது கொண்டே அறிவித்தார். இனி நான் இன்னும் அதிகமாக சந்தா கொடுப்பேன் என்று அவர் கூறினார். அங்கிருந்த மக்களும் ஆச்சரியமடைந்தனர். ஆறு மாதத்திற்கும் அதிகமான காலம் ஆகியிருந்தது. மகன் எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை. தாயைக் குறித்து கவனம் கொள்ளாமல் இருந்தார். பொருளாதார ரீதியில் தாயில் நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. ஆனால், அந்நிலையிலே இவ்வாறு நிகழ்ந்தது.

அல்லாஹ் எப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்தான் என்றால், ஃபோன்காலும் வந்தது. மேலும், அத்துடன் தொகையும் வந்துவிட்டது. இந்த சம்பவத்தின் மூலமாக அஹ்மதிய்யத்தே உண்மையான இஸ்லாம் ஆகும் என்ற தாக்கம் மக்கள் மீது ஏற்பட்டது. மேலும் நாங்கள் மரணம் வரை அஹ்மதிகளாக இருப்போம் என அனைவரும் உறுதி பூண்டனர்.

தன்ஸானிய்யாவின் வடமேற்கில் கீட்டியா மண்டலத்தில் ஒரு ஜமாஅத் உள்ளது. அங்குள்ள முஅல்லிம் எழுதியுள்ளார்:

அப்துல்லாஹ் சாஹிப் என்ற ஒரு காதிம் இருக்கின்றார். சில மாதங்களுக்கு முன்பு அவர் பைஅத் செய்தார். ஒரு நாள் குத்பா ஜுமுஆவில் தஹ்ரீகே ஜதீத் சந்தாக் குறித்து செவியுற்றார். இது சந்தா வசூல் செய்வதற்கான கடைசி மாதம் ஆகும். மேலும், ஒவ்வொரு அஹ்மதியும் தம்மால் இயன்ற அளவு அருட்களை பெறுவதற்காக அதில் இணைய வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டார். அப்துல்லாஹ் சாஹிப் அவர்களிடம் எந்த தொகையும் இருக்கவில்லை. எனினும், அடுத்த நாள் மாலைக்குள் நிச்சயமாக ஏதாவது கொஞ்சம் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் கொடுத்துவிடுவதாக வாக்குறுதி அளித்தார். அடுத்த நாள் வேலை தேடி புறப்பட்டார். (தனது) நிலத்தில் விவசாயம் செய்வதற்காக ஒரு நபருக்கு ஒரு வேலையாளின் தேவை இருந்தது. மேலும், அப்துல்லாஹ் சாஹிபிற்கு அந்த நபர் வேலை கொடுத்துவிட்டார். மேலும், அன்னார் தம்மிடம் கொடுக்கப்பட்ட வேலையை நாள் முழுவதும் கடின உழைப்புடன் செய்து முடித்தார்கள். சாதாரண நாட்களில் அந்த வேலையை அன்னார் இரண்டு நாட்களில் செய்வார்கள். ஆனால், அன்னார் மாலைக்குள் முடித்துவிட்டார்கள். என்ன தொகை கிடைத்ததோ அதை எடுத்துக் கொண்டு அன்னார் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதற்கு வந்துவிட்டார்கள்.

அல்லாஹ் எனது எண்ணத்தில் பரக்கத் செய்துள்ளான். மேலும், தனது தனிப்பட்ட அருளினால் பொருள் தியாகம் செய்வதற்கு அவன் எனக்கு நற்பேறு வழங்கியுள்ளான்.

இந்த உணர்வும் ஏற்பட்டுவிடுகின்றது.

ஆஸ்திரேலியாவிற்கு அருகில் சாலமன் தீவு உள்ளது. ஆஸ்திரேலியாவின் முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்: சாலமன் தீவு சுற்றுப் பயணத்தின்போது தர்பிய்யத், தப்லீக் மற்றும் நிர்வாக நிகழ்ச்சிகள் மட்டுமின்றி தஹ்ரீகே ஜதீத் வருடத்தின் நிறைவையொட்டி ஜமாஅத் உறுப்பினர்களுக்கு சந்தா தொடர்பாக கூறப்பட்டது. கவனமூட்டப்பட்டது.

அங்கு ஒரு பெண்மணி இருக்கின்றார். அவருடைய கணவர் முஸ்லிம் அல்லாதவர் ஆவார். இருவரும் கோழிப் பண்ணை ஒன்றை நடத்தி வருகின்றனர். தஹ்ரீகே ஜதீத் செயலர் சந்தா கொடுப்பதற்கு நினைவூட்டுவதற்காக அவரது வீட்டிற்கு சென்றபோது அவர் வீட்டில் இல்லை. அவருடைய பிள்ளைகள் தங்களிடம் இருந்த சிறிய தொகையை கொடுத்துவிட்டார்கள். அந்தப் பெண்மணி வீட்டிற்கு திரும்பி வந்தபோது, இவ்வாறு தஹ்ரீகே ஜதீத் சந்தா செயலர் வந்திருந்தார்கள் என்று அவரது பிள்ளைகள் கூறினர். அந்தப் பெண்மணி உடனடியாக செகரட்டரி சாஹிப் வீட்டிற்கு சென்றார். மேலும், ஆயிரம் டாலரை தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக செலுத்திவிட்டார். அப்போது, நான் எல்லா நண்பர்களிடமிருந்தும் சந்தா வசூல் செய்துவிட்டேன். பட்டியலையும் தயார் செய்து கொடுத்துவிட்டேன். எனவே அடுத்த வருட சந்தா கணக்கில் வரவு வைத்துக் கொள்வோம் என்று செகரட்டரி சாஹிப் அவரிடம் கூறினார். அதற்கு, இல்லை! இந்த வருடம் இவ்வளவு கொடுப்பேன் என்று நான் எனது இறைவனிடம் வாக்குறுதி செய்திருந்தேன். எனவே நடப்பு வருடத்திலேயே சேர்த்து விடுங்கள் என்று அவர் கூறினார். எனவே, அவர் கூறியதன் அடிப்படையில் பட்டியல் மீண்டும் தயாரானது. இரவோடு இரவாக தலைமையகத்திற்கு அது தொடர்பான தகவல் கொடுக்கப்பட்டது.

பின்னர், அல்லாஹ் எவ்வாறு பல மடங்கு அதிகரித்து விடுகின்றான் என்பதற்கான காட்சிகளும் காணக் கிடைக்கின்றன.

கினிகனாகரேவின் முபல்லிக் சாஹிப்

எழுதுகின்றார்கள்: இங்கு காஃபீலியா (Kafilya) என்ற ஓர் இடம் உள்ளது. மிஷனரி அங்கு குத்பாவில் தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கவனமூட்டினார். பின்னர், தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கும் சுற்றுப் பயணம் செய்தார். முஹம்மது ஸிலா (sylla) என்ற ஓர் இளைஞரை சந்தித்தார். மேலும் அவருக்கு சந்தா கொடுப்பது தொடர்பாக கவனமூட்டப்பட்டது. எனவே அவர் அப்போதே தனது சட்டைப் பையிலிருந்து பத்தாயிரம் ஃபிரான்ங் (Guinean Franc) தொகையை எடுத்து தஹ்ரீகே ஜதீத் கணக்கில் கொடுத்துவிட்டார். மேலும் அந்த இளைஞர் அத்துடன் இவ்வாறு கூறினார்:

இந்த தொகையே என்னிடம் இருந்தது. இந்தப் பணத்தைக் கொண்டு நான் மதியம் மற்றும் இரவு உணவை வாங்க இருந்தேன். ஆனால், இன்று அல்லாஹ் மற்றும் அவனது திருப்திக்காக நான் பட்டினியாக இருப்பேன்.

இந்த சம்பவம் நடந்த நான்கு நாட்களுக்குப் பிறகு, அல்லாஹ் எனது தியாகத்தை ஒப்புக் கொண்டுவிட்டான் என்று அந்த இளைஞரிடமிருந்து மிஷனரி சாஹிபிற்கு ஃபோன் வந்தது. அவர் கூறுகின்றார்: நான் ஒரு mining (சுரங்க) கம்பெனியில் டிரைவர் வேலைக்காக இன்டர்வியூ கொடுத்திருந்தேன். மேலும் அங்கு அல்லாஹ்வின் அருளினால் எனக்கு ஐந்தரை மில்லியன் கினி ஃபிரான்ங் மாதாந்திர சம்பளத்துடன் ஐந்து வருட contract (ஒப்பந்தம்) கிடைத்துவிட்டது. இவ்வாறு அல்லாஹ் பல ஆயிரம் மடங்கு அதிகரித்து எனக்கு வழங்கிவிட்டான். வருடாந்திரச் சந்தாவாக அவர் பத்தாராயிரம் கொடுத்திருந்தார். ஆனால், அவருக்கு எழுநூறு மடங்கை விடவும் கூடுதலாக ஆறாயிரத்து அறுநூறு மடங்கு ஆகும். நான் நாடினால் அதைவிடவும் அதிகமாகவும் கொடுப்பேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே இங்கு அதை விடவும் கூடுதலாக வழங்கியதற்கான காட்சி தென்படுகின்றது.

அடுத்து, நைஜீரியாவின் சதர் லஜ்னா எழுதுகின்றார்கள்:

அல்லாஹ்வின் அருளினால் லஜ்னா இமாயில்லாஹ் நைஜீரியாவிற்கு முதலாவது தேசிய அளவிலான மூன்று நாள் தர்பிய்யத் வகுப்பை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். தஹ்ரீகே ஜதீதின் நடப்பு வருடம் முடிவடைய உள்ளது. எவ்வளவு விரைவாக கொடுத்த வாக்குறுதிகளை முழுமை செய்ய முடியுமோ முழுமை செய்யுங்கள் என்றும் அதில் பொதுவாக கவனமூட்டப்பட்டது.

கூறுகின்றார்கள்: ஆனால், அந்தப் பெண்கள் அப்பொழுதே சந்தா கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். தற்போது நினைவூட்டலாக மட்டுமே கூறப்பட்டது. இன்னும் காலம் உள்ளது என்று அவர்களிடம் கூறப்பட்டது. ஆனால், இல்லை நாங்கள் இப்போதே கொடுப்போம் என்று அவர்கள் கூறிவிட்டனர். அந்தப் பெண்களைப் பார்த்து ஏனைய பெண்களும் (சந்தா கொடுக்க) முன்னால் வந்தார்கள். அவர்கள் பொருள் தியாகத்தை முன்வைத்தார்கள். மேலும் ஒரு பெரும் தொகை சேர்ந்து விட்டது.

அல்லாஹ்வின் அருளால் உலகில் ஏறக்குறைய எல்லா இடத்திலும் லஜ்னா அமைப்பின் பெண்கள் தமது எண்ணிக்கையின் அடிப்படையில் தமது பங்கை சந்தாக்களில் கொடுக்கின்றனர். மேலும், மற்றவரை விடவும் பின் தங்கி இருக்கவில்லை. சில நாடுகளில் சிலமுறை குத்தாம் மற்றும் அன்சார் அமைப்பிற்கு கவனமூட்ட வேண்டிய நிலை உள்ளது. லஜ்னா அமைப்பு தியாகத்தில் முன்னேறிவிட்டது. நீங்களும் அதற்கேற்ப சந்தா செலுத்துங்கள்.

சென்ட் பீட்டர்ஸ்பர்க்,ரஷ்யாவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:

இர்ஸான் பேக் சாஹிப் என்பவர் ரஷ்யாவின் ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவார். கடந்த வருடம் நான் தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பை செய்திருந்தேன்.

எனவே, நான் தஹ்ரீகே ஜதீதில் ஓராயிரம் ரூபல் தொகையை கொடுக்கின்றேன் என்று கூறி கடந்த வருடம் இந்தத் தொகையை இர்ஸான் சாஹிப் கொடுத்திருந்தார்.

இந்த வருடம் பத்தாயிரம் ரூபல் நான் வாக்குறுதியாக கொடுக்கின்றேன் என்று தற்போது அவர் கூறினார். பின்னர் அவர் தனது வியாபாரத்தை குறித்து கூறினார்: நான் புதிதாக வியாபாரம் தொடங்க உள்ளேன்.

எவ்வாறு இருப்பினும், ஜூலை மாதத்தில் தமது பத்தாயிரம் ரூபல் தொகைக்கான வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார். ரஷ்யாவின் நிலைமைகளும் உக்ரைன் போரின் காரணமாக கடினமானதாக உள்ளது.

ரூபல் மதிப்பு வீழ்ச்சி அடைந்துவிட்டது. ஆனால் இவர் அதனை நிறைவேற்றிவிட்டார். இது மொத்தம் பத்தாயிரம் ரூபல் தொகையாகும். அது நூற்று எழுபத்தெட்டு யூரோ ஆகும். ஆயினும் இது அங்குள்ள நிலைமையை வைத்துப் பார்க்கும்போது அவருக்கு பெரும் தொகையாகும். அவர் அதனை செலுத்திய பிறகு கூறினார்: நான் இதனை தவிர்த்து ஐநூறு ரூபல் தொகையை சந்தாவாக கொடுத்து வருவேன். தினமும் ஐநூறு ரூபல் கொடுத்து வந்தார். அல்லாஹ்வின் அருளினால் எனது வியாபாரத்தில் எந்த அளவு அருள் கிடைத்துள்ளது என்றால், மோசமான நிலைமை இருந்தபோதிலும் எனக்கு நிறைய வருமானம் கிடைக்கின்றது. அதன் பிறகு, அவர் அதனை ஆயிரம் ரூபல் தொகையாக அதிகரித்து விட்டார். அதனையும் தினமும் கொடுத்து வருகின்றார்.

கேமரூனில் மர்வா என்ற வடக்கு நகரம் ஒன்று உள்ளது. அங்குள்ள முஅல்லிம் எழுதுகின்றார்:

இதுவும் ஈமானில் உறுதியையும், சந்தாவின் அருட்களையும் பறைசாற்றுகின்ற சம்பவம் ஆகும். அப்துல்லாஹ் சாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் மிகவும் ஏழை ஆவார். கூறுகின்றார்: கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீதிற்காக அரை வாளி அதாவது ஐந்து கிலோ மக்கா சோளத்தை சந்தாவாக தஹ்ரீகே ஜதீதில் கொடுத்தார். மேலும் கூறுகின்றார்கள்: அதன் காரணமாக எனக்கு அல்லாஹ் ஐந்து மூட்டை வழங்கிவிட்டான். அதாவது முந்நூற்று ஐம்பது கிலோ ஆகும். எழுபது மடங்கு அதிகம் கிடைத்தது.

இந்த வருடம் கூறுகின்றார்: நான் மிகவும் கவலையடைந்திருந்தேன். உரம் விலை அதிகரித்திருந்தது. விலைவாசி உயர்ந்து விட்டது. என்னால் வாங்க முடியவில்லை. அல்லாஹ் எந்த அளவு அருள் செய்தான் என்றால், இந்த வருடம் அவருக்கு இரண்டு மடங்கு விளைச்சல் கிடைத்தது. மேலும், அவர் எழுபது கிலோ மூட்டையை தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக கொடுத்துவிட்டார்.

கூறுகின்றார்: தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் அருட்களின் காரணமாக இறைவன் என்னுடைய உழைப்பு மற்றும் வயலின் விளைச்சலில் அருள் செய்கின்றான் என்று நான் எனது குடும்பத்தினருக்கும் கூறுகின்றேன்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: சின்னச் சின்ன சம்பவங்கள் உள்ளன. ஆனால் ஏழை அஹ்மதிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஒரு கிராமத்தைச் சேர்ந்த பாதே ஸீஸே என்ற ஒரு நண்பர் 2014 ஆம் ஆண்டில் பைஅத் செய்திருந்தார். அவர் கூறினார்:

நான் ஜமாஅத்தில் இணைவதற்கு முன் வேலை எதுவும் எனக்கு கிடைத்திருக்கவில்லை. பலமுறை வேலை கிடைப்பதற்கு முயற்சி செய்தேன். ஆனால் பயன் தரவில்லை.

கூறுகின்றார்: ஜமாஅத்தில் இணைந்ததிலிருந்து அனைத்து சந்தாக்கள் மற்றும் ஜமாஅத்தின் ஏனைய பணிகள் போன்றவற்றில் முந்திக் கொண்டு பங்கு பெற்று வருகின்றேன். எனவே, தற்போது அவர் இரண்டு இடத்தில் வேலை பார்த்து வருகின்றார். ஒருநேரத்தில் வேலை எதுவும் இல்லாமல் இருந்தேன். குடியிருப்பது கடினமாக இருந்தது. வீடு இல்லாமல் இருந்தது. தற்போது அவர் நல்ல உறுதியான வீட்டையும் கட்டிவிட்டார்.

ஜமாஅத் அவருக்கு உதவி செய்தது என்று மக்கள் கூறுகின்றனர். அதற்கு, இது ஜமாஅத் செய்த உதவியல்ல. அல்லாஹ் சந்தாவின் அருட்களின் விளைவாக எனக்கு உதவி செய்தான் என்று அவர்களிடம் பதில் கூறுகின்றார்.

இந்தோனேஷியா அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஓர் அஹ்மதி இருக்கின்றார். அவருடைய ஒரு தொழிற்சாலை உள்ளது. நிலைமை மோசமாக உள்ளது.

தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கடந்த வருடம் சில சம்பவங்களை குறிப்பிட்டுவிட்டு புதிய வருடத்திற்கான அறிவிப்பை நான் செய்தேன்.

அப்போது அவர் மீது மிகவும் நல்ல தாக்கம் ஏற்பட்டது. மிக ஆழமான தாக்கம் ஏற்பட்டது. அவர் உடனடியாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக கடந்த ஆண்டைக் காட்டிலும்

இரண்டு மடங்கு கூடுதலான வாக்குறுதியை கொடுத்துவிட்டார். மேலும், உடனடியாக அந்த வாக்குறுதியை நிறைவேற்றியும்விட்டார். ஒரு வாரம் கழிந்த உடனேயே அல்லாஹ் அவருக்கு வழங்கிவிட்டான். மேலும் அவரது வருமானம் அதிகரிக்க ஆரம்பித்தது. இவ்வாறு அவர் ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த ஒரு கம்பெனி திரும்பி வந்துவிட்டது. மேலும் மிகப் பெரிய வியாபாரம் ஒன்றை செய்வதற்கு முன்வந்தது.

இந்த வருடம் அவர் கூறுகின்றார்: எனது கம்பெனியின் வருமானம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் பல மடங்கு அதிகரித்துவிட்டது.

ஜெர்மனியிலிருந்து ஃபர்ஹாத் என்ற முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: வேஸ்பாதன்(wiesbaden) ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். வருமானம் நின்றுவிட்டது. கணவரை (தனது நாட்டிற்கு) அழைக்க வேண்டியதிருந்தது. அவரால் ஸ்பான்ஸர் செய்ய முடியாமல்போனது. தனது சகோதரரிடம் தனது கவலையை வெளிப்படுத்தினார். அப்போது, நல்ல வழிமுறை இதுவேயாகும். அதாவது துஆ செய்.சந்தா கொடு. பொருள் தியாகம் செய் என்று அவர் கூறினார். அவர் தனது நகையை விற்று சந்தா கொடுத்து விட்டார். நான்கு நாட்களுக்குப் பிறகு, (சம்பந்தப்பட்ட கம்பெனியின்) வேலை கொடுக்கும் ஆட்களிடம் இருந்து, உங்களுக்கு நிரந்தரமான வேலை வழங்கப்படுகின்றது என்று செய்தி வந்துவிட்டது. அந்த சம்பளத்திலிருந்து அவரால் தமது கணவருக்கு ஸ்பான்ஸரும் செய்ய முடிந்தது.

இந்தியாவிலிருந்து வகீலுல் மால் சாஹிப் கூறுகின்றார்கள்: இங்கு ஒரு சகோதரர் இருக்கின்றார். அவர் தஹ்ரீகே ஜதீதின் பொருள் தியாகத்தில் மிகவும் முன்னணியில் உள்ளார். தஹ்ரீகே ஜதீத் பட்ஜெட்டில் கூடுதல் செய்யுமாறு அவரிடம் கூறப்பட்டபோது,நான் எவ்வளவு அதிகரிக்க வேண்டும்? என்று கேட்டார். உங்களுடைய வசதிக்கேற்ப உங்களால் எவ்வளவு முடியுமோ அதிகரித்துக் கொடுங்கள் என்று நான் கூறினேன். ஆனால், நீங்கள் கூறுங்கள் என்று அவர்களுடைய முபல்லிக் அல்லது மேலிடப் பிரதிநிதியிடம் அவர் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். எனவே, சரி! பத்து லட்சம் அதிகரித்து விடுங்கள் என்று பிரதிநிதி கூறிவிட்டார். அவர் ஏற்கனவே ஐந்து லட்சம் கொடுத்திருந்தார். எனவே, அவர் அதிகரித்துவிட்டார். மேலும் தொகையையும் கொடுத்துவிட்டார்.

அவர் கூறுகின்றார்: எனக்கு ஒரு வீடு இருந்தது. அதன் ரிஜிஸ்டர் பணிகள் நடக்க முடியாமல் இருந்தது. ஒரு பெரும் நஷ்டம் ஏற்பட்டு விடும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், சந்தா அதிகரித்து கொடுத்த சில நாட்களிலேயே நிலுவையில் இருந்து வந்த பணியும் நடந்துவிட்டது. மேலும் அல்லாஹ் நஷ்டத்தையும் ஈடு செய்து விட்டான்.

ஆக, அல்லாஹ் செல்வந்தர்களிடமும் கடன் வைப்பதில்லை. ஏழைகளிடமும் கடன் வைப்பதில்லை. அனைவருக்கும் அதற்கு ஏற்ப வழங்குகின்றான்.

இந்தியாவிலிருந்து வகீலுல் மால் சாஹிப் எழுதுகின்றார்கள்: காஷ்மீருடைய ஒரு மருத்துவர் இருக்கின்றார். அவர் பேராசிரியர் ஆவார். அவர் காஷ்மீர் பல்கலைகழகத்தில் பேராசிரியர் ஆவார். கொடுத்த வாக்குறுதிகளை முழுமை செய்திருந்தார். அதன் பிறகு, அவர் கூறினார்:

Professor-cum-cheif Scientist ஆக நான் பணி உயர்வு செய்யப்பட்டுள்ளேன். மேலும் எனது ஊதியம் அசாதாரண வகையில் உயர்த்தப்பட்டுள்ளது.

அதனால், அவர் தனது தஹ்ரீகே ஜதீத் சந்தாவை அதிகரித்து கொடுத்தார்.

மொரீசியஸ் நாட்டின் பெண்மணி ஒருவர் கூறுகின்றார்: கடந்த ஆண்டு தஹ்ரீகே ஜதீத் தொடர்பான உறவினர்களின் சில சம்பவங்களை கேட்ட பிறகு, செலுத்துவதற்கு கடினமான தொகையை வாக்குறுதியாக கொடுக்க வேண்டும் என்று எனது கணவர் என்னிடம் கூறினார். எனவே 75ஆயிரம் மொரீசியன் ரூபாயை தனது வாக்குறுதியாக அவர் எழுதிவிட்டார்.

கூறுகின்றார்:

அந்த நேரத்தில் எனது கணவர் ஒரு மெடிக்கல் கம்பெனியில் வேலை செய்து வந்தார். கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் சாதாரண அளவில் மட்டுமே ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் வாக்குறுதி எழுதிய பிறகு ஒரு தனியார் மருத்துவ மனையிலிருந்து வேலைக்கான ஆஃபர் வந்துவிட்டது. அதே நாட்களில் கணவர் தனது தாய்க்கு ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். ஆக, வேலைக்காக இன்டர்வியூவில் அவருக்கு கலந்து கொள்ள வேண்டியிருந்தது. இந்த இன்டர்வியூ நடக்கும் இடத்தில் எனக்கு வேலை கிடைத்துவிடும். மேலும் நான் பொருள் தியாகம் செய்த தொகைக்கு சமமான அளவில் எனக்கு ஊதியம் கிடைத்துவிடும் என்று எனது கணவர் கூறினார்.

ஆக, இன்டர்வியூ நடந்தது. அவர் (வேலைக்கு) சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேலும் 76ஆயிரம் (மொரிசீயன்) ரூபாய் ஊதியமாக வழங்கப்படும் என்று அவருக்கு கூறப்பட்டது. வாக்குறுதி 75ஆயிரம் ரூபாயாக இருந்தது.

அவர் கூறினார்: நான் எனது தாயாருக்கு கொடுத்திருந்த ஆயிரம் ரூபாயையும் அல்லாஹ் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

பங்களாதேஷ் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: இங்கு ஒரு சகோதரருக்கு கொரானா தொற்றின் காரணமாக மிகவும் பாதிப்பு ஏற்பட்டது. சந்தாக்களில் மிகவும் அதிகமான பாக்கி ஏற்பட்டுவிட்டது. தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக அவருக்கு நினைவூட்டப்பட்டது. எனவே, தனது மனைவி சேமித்து வைத்திருந்த பதினொன்றாயிரத்து ஐநூறு டகாவை (சந்தாவாக) செலுத்திவிட்டார். ஆனால் இன்னும் பாதி தொகை மீதமிருந்தது. எவ்வாறு இருப்பினும், கூறுகின்றார்கள்: வந்து சந்தா பாக்கியை வாங்கி செல்லும்படி அந்த மாதக் கடைசியில் அவரது மனைவி தகவல் அனுப்பினார். நமது டீம் அங்கு சென்றபோது வாக்குறுதியாக குறிப்பிட்டிருந்த தொகையிலிருந்து மூன்று மடங்கு அதிகமாக சந்தா கொடுத்தார். மேலும் கட்டாயச் சந்தாவின் பாக்கியையும் கொடுத்துவிட்டார். அத்துடன், தனது ஒரு நீண்ட நாள் தேவையை இறைவன் சமீபத்தில் நிறைவேற்றி தந்துவிட்டான் என்ற நற்செய்தியையும் கூறினார்.

நீண்ட காலமாக வீடு கட்டுவதற்காக நிலம் தேடிக் கொண்டிருந்தார்கள். சந்தா கொடுக்க அவர்கள் துவங்கியதிலிருந்து இறைவன் அற்புதமான வடிவில் வீடு கட்டுவதற்காக ஒரு பிளாட்டை வாங்குவதற்கு வாய்ப்பு வழங்கிவிட்டான். வருமானம் அதிகரித்துவிட்டது. சந்தாக்களையும் கொடுத்துவிட்டார். மேலும், அல்லாஹ் சொத்துகளை உருவாக்குவதற்கு நற்பேறும் வழங்கிவிட்டான்.

புர்கினோஃபாஸ்ஃவைச் சேர்ந்த ஒரு நண்பர் இருக்கின்றார். ஆசிரியர் ஆவார். வாகனம் வாங்குவதற்கு அவருக்கு நற்பேறு கிடைத்தபோது, நாங்களும் ஆசிரியர்களாகத்தான் இருக்கின்றோம். ஆனால் எங்களால் அதனை வாங்க முடியவில்லை. நிச்சயமாக (உங்களுக்கு) ஜமாஅத் உதவி செய்திருக்கும் என்று அவருடன் பணியாற்றும் மற்ற ஆசிரியர்கள் கூறினர்.

அவர் கூறுகின்றார்: நான் அந்த ஆசிரியர்களிடம், ஜமாஅத் உதவி செய்யவில்லை. அல்லாஹ் எனது செல்வத்தில் சந்தாக்களின் காரணமாக இந்த

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அருள் செய்துவிட்டான் என்று நான் கூறினேன்.

கூறுகின்றார்கள்: மாணவப் பருவம் முதலே எனக்கு சந்தா கொடுக்கும் பழக்கம் உள்ளது. அல்லாஹ் எப்போதும் எனக்கு வழங்கி வருகின்றான்.

ஜெர்மனியின் (Osnabruck) ஒஸ்னாபர்க் ஜமாஅத்தில் ஒரு சகோதரர் இருக்கின்றார். அவர் எழுதுகின்றார்: தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. நான் ஐநூறு யூரோ அதிகமாக கொடுப்பதற்கு கொண்டு சென்றபோது, ரசீது புக் தீர்ந்துவிட்டது என்று என்னிடம் கூறப்பட்டது.

கூறுகின்றார்கள்: நான் திரும்பி சென்றுவிட்டேன். எனது வேலையாட்களுக்கு பணம் கொடுக்க வேண்டியது இருந்தது. எனவே நான் அந்தத் தொகையை அவர்களுக்கு கொடுத்துவிட்டேன்.

அப்போது இரவில் கனவில் அவர் என்னை (அதாவது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களைக்) கண்டார்.

தாங்கள் என்னிடம் கூறிக் கொண்டிருந்தீர்கள் என்று அவர் கூறுகின்றார். அதாவது அந்த நபரிடம், எனக்கு ஐந்தாயிரம் யூரோ வேண்டும் என்று நான் கூறுகின்றேன்.

கூறுகின்றார்கள்: இதன் பொருள் தஹ்ரீகே ஜதீத் சந்தா என்பதை நான் புரிந்து கொண்டேன். மனைவியிடம் கனவைக் கூறினேன். தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் ஐந்தாயிரம் யூரோ கொடுத்துவிடுவோம் என்று அவர் கூறினார். அதற்கு சிலகாலம் கழித்து கொரானா ஹெல்பில் எனது வங்கிக் கணக்கில் இருபத்திரெண்டாயிரத்துக்கும் அதிகமான தொகை வந்துவிட்டது. அந்த தொகையை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

கனடாவிலிருந்து ஒரு பெண்மணி கூறுகின்றார்: பொருளாதார கஷ்டத்தை எதிர் கொண்டு வந்தோம். எனது வாக்குறுதியை நான் எவ்வாறு நிறைவு செய்வேன் என்ற பெரும் கவலை இருந்து வந்தது. மிகவும் கவலையடைந்து வந்தேன். துஆவும் செய்து கொண்டிருந்தேன். எனது எண்ணம் மிகவும் நல்லதாக இருந்தது. வெளிப்படையில் தாக்கங்கள் வெளிப்படாமல் இருந்து வந்தன. அதிகமாக துஆக்கள் செய்தேன்.

பின்னர் என்ன நடந்தது? அவர் கூறுகின்றார்: ஒருநாள் இரவில் நான் எனது மகளின் சான்றிதழை தேடிக் கொண்டிருந்தேன். அப்போது அவருக்கு ஒரு பழைய பர்ஸ் கிடைத்தது. அவர் கூறுகின்றார்: எட்டு வருடங்கள் முன்பு அமெரிக்கா சென்றிருந்தேன். அமெரிக்கா செல்வதற்கு முன்னால் அங்கு செலவிடுவதற்காக கொஞ்சம் பணம் வைத்திருந்தேன். அதிலிருந்து சிறிது தொகை எஞ்சிவிட்டது. அந்தத் தொகையை அங்கு போட்டு வைத்திருந்தேன். மேலும், அதனை நான் மறந்துவிட்டேன். சந்தா கொடுப்பதற்கு எவ்வளவு தொகை தேவையோ அதே அளவிலான தொகை அதிலிருந்து கிடைத்தது. ஆக, அல்லாஹ் இவ்வாறும் உதவி செய்கின்றான்.

கினிகனாகாரியின் சத்ர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஓர் ஏழை அஹ்மதிப் பெண்மணி இருக்கின்றார். சாதாரணமாக பொருட்களை விற்பனை செய்து தமது வாழ்க்கையை கழித்து வருகின்றார். தஹ்ரீகே ஜதீத் சந்தா சுற்றுப் பயணத்தின்போது அவருடைய வீட்டிற்கு நாங்கள் சென்றோம். மேலும், அந்தப் பெண்மணிக்கும் தஹ்ரீகே ஜதீத் சந்தா செலுத்துவதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. அப்போது அவர் சுயமே கூறினார்: தற்போது இந்த சிறிய அளவிலான வருமானத்தின் காரணமாக நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். கடன் வாங்கி வியாபாரம் தொடங்கியிருந்தேன். வருமானமே இல்லாத நிலைமைதான் உள்ளது. கடனையும் அடைக்க முடியவில்லை.

எவ்வாறு இருப்பினும், புரிய வைக்கப்பட்டது. துஆவிற்காகவும் கூறப்பட்டது. அப்போது தன்னிடம் இருந்த மொத்த தொகையான இருபதாயிரம் ஃபிரான்ங்கை அந்தப் பெண்மணி சந்தாவில் கொடுத்துவிட்டார்.

அந்தப் பெண்மணி (தனது ஏழ்மை) நிலைமையுடன் போராடிக் கொண்டிருந்தார். எனவே அது மிகவும் பெரியத் தொகையாக இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு நமது மிஷனரி சாஹிப் ஒரு வேலையின் நிமித்தம் மீண்டும் அந்தப் பெண்ணை சந்திப்பதற்காக சென்றார்கள். அவரை சந்தித்தபோது அந்தப் பெண்மணி மிகவும் உணர்வுகள் நிறைந்த குரலில், அல்லாஹ் எனது அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து விட்டான் என்று மகிழ்ச்சியுடன் கூறினார். எனது எளிய வியாபாரம் மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நான் எனது கடனையும் அடைத்துவிட்டேன். இவை அனைத்தும் அந்த பொருள் தியாகத்தின் காரணம் ஆகும்.

தார்தாரிஸ்தான், ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு நண்பர் ஃபரீத் இப்ராஹீம்மோவ் இருக்கின்றார். கூறுகின்றார்கள்:

கடந்த வருடம் கோடைகாலத்தில் எனது ஃபோனில் சற்று விநோதமான விஷயம் நிகழ்ந்தது. எனது வங்கிக் கணக்கில் எனது பயணிகளிடம் இருந்து சிறிது தொகையை வசூல் செய்த பிறகு காலத்தின் கலீஃபாவுடைய பொருளாதார நன்கொடைகள் தொடர்பான குத்பா தானாகவே எனது ஸ்மார்ட் ஃபோனில் மட்டும் வந்துவிட்டது. கூறுகின்றார்கள்: ஒரு முறை (இப்படி) நிகழவில்லை. மாறாக, எனது கணக்கில் பெரும் தொகை வரவு வைக்கப்படும்போதெல்லாம் இவ்வாறு ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்துவிடும். அல்லாஹ் தனது இருப்பிற்கான சான்றை வழங்கியவாறு எனக்கு நினைவூட்டுகின்றான் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து பொருள் தியாகம் செய்வதற்கு எனக்கு நற்பேறு கிடைத்து வருவது எனக்கு கிடைத்த மாபெரும் கண்ணியம் ஆகும்.

அவரது ஃபோனில் தானாகவே குத்பா வந்துவிடுவது அல்லது ஏதாவது செய்தி கிடைத்துவிடுவது போன்ற விஷயங்களால் அவருக்கு சந்தா கொடுப்பதற்கான உந்துதல் ஏற்பட்டுவிடுகின்றது.

அடுத்து தன்ஸானியாவைச் சேர்ந்த ஒரு தூய பெண்மணி இருக்கின்றார். கூறுகின்றார்:

ஜல்ஸாவிலிருந்து திரும்பி வரும்போது, தஹ்ரீகே சந்தாவில் பாக்கி உள்ளது என்ற எண்ணம் அவர்களுக்கு வந்தது. எந்த வழியும் தென்படவில்லை. ஒரு நபர் அவரிடமிருந்து கடன் வாங்கியிருந்தார். அவர் திருப்பிக் கொடுத்துவிட்டால் சந்தா கொடுத்துவிடலாம் என்று அவருக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால், அவர் பதில் கொடுக்காமல் இருந்து வந்தார். ஃபோன் அழைப்பையும் ஏற்காமல் இருந்து வந்தார். நோய்வாய்ப்பட்டிருந்தார். அன்றாடம் மருந்து போன்றவற்றிற்கான செலவீனங்கள் அவருக்கு அதிகரித்து இருந்தன. மிகவும் கவலைபட்டுக் கொண்டிருந்தார். பிள்ளைகளின் கல்விக் கட்டணம் குறித்த கவலையும் இருந்தது. துஆ செய்யுங்கள் என்று தனது பிள்ளைகளிடம் கூறினார். கூறுகின்றார்: இதற்கிடையில், பாங்கு சப்தம் வந்தபோது, தொழுகைக்கு செல்வோம். மேலும் இறைவனிடம் வேண்டுவோம். நம்மிடம் பைசா இல்லை. அல்லாஹ் நமது துஆக்களை கேட்பான். மேலும் அவரது உள்ளத்தில் எண்ணத்தை ஏற்படுத்தி பணத்தை அந்த நபர் திருப்பிக் கொடுக்கும்படி செய்துவிடுவான் என்று அந்த பிள்ளைகள் கூறினர். இவ்வாறு அல்லாஹ் பிள்ளைகளின் ஈமானையும் உறுதிபடுத்துகின்றான்.

எனவே, தாயும், மகனும் உளு செய்துவிட்டு தொழுகையில் அல்லாஹ்விடம் முறையிட்டனர். அல்லாஹ் இவ்வாறு செய்துவிட்டான். அதாவது தொழுகை முடிவடைவதற்கு முன்னரே ஃபோனின் மணி அடிக்கத் தொடங்கிவிட்டது. அது எந்த நபர் கடன் கொடுக்க வேண்டியது இருந்ததோ அவரின் அழைப்பாக இருந்தது. நான் வீட்டிற்கு வெளியில் நிற்கின்றேன். முழு பணத்தையும் திருப்பிக் கொடுக்க வந்துள்ளேன் என்று அந்த நபர் கூறினார். நான் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு வேனிற்காக காத்திருந்தேன். அப்போது பாங்கு சப்தம் கேட்டது. அத்துடன் முதலில் கடனை திருப்பிக் செலுத்தி விடு என்று யாரோ ஒருவரின் கூறிக் கொண்டிருந்த சப்தமும் எனக்கு கேட்டது என்று அந்த நபர் கூறினார். ஆக, அவர் பணத்தை திருப்பிக் கொடுக்க வந்துவிட்டார். அந்தப் பெண்ணும், பிள்ளையும் இந்த அனைத்து சம்பவங்களையும் கேட்டபோது அல்லாஹ்வை புகழத் தொடங்கிவிட்டனர். அல்லாஹ்விற்கு நன்றி என்று அவர்கள் கூறினர். பார்த்தீர்களா! நாம் தொழுதோம். எனவே நமக்கு பணம் கிடைத்துவிட்டது என்று பிள்ளைகள் கூறினர். பின்னர் அவர்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர்.

(ரஷ்யாவின்) சென்ட்பீட்டர்பர்க்கின் இக்ராம் ஜான் சாஹிப் என்ற ஒரு சகோதரர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: தேவையுடையவர்களுக்கு உதவி செய்ய

வேண்டும். மேலும் குறிப்பாக எனது சந்தாக்களை செலுத்த வேண்டும் என்பதற்காக நான் எப்போதும் பொருளாதார செழிப்பிற்கு துஆ செய்து வருகின்றேன். அது எப்போதும் விநோதமான முறையில் வெளிப்பட்டு வந்தது.

கூறுகின்றார்கள்: கடந்த முறை என்னிடம் மூன்றாயிரம் ரூபல்ஸ் குறைவாக இருந்தது. அதேநேரம் சந்தா செலுத்துவதற்கு கடைசி நாளாக இருந்தது. பணி செய்து கொண்டிருக்கும்போதே என்னிடம் இரண்டு நபர்கள் வந்துவிட்டனர். அவர்களில் ஒருவர் எனக்கு ஆயிரம் ரூபல்ஸும், மற்றொருவர் இரண்டாயிரம் ரூபல்ஸும் கொடுத்தனர். அதற்கு முன்னர் என்னிடம் இதுபோன்று ஒருபோதும் நடந்ததில்லை. ஏனெனில் வேலையின் மூலமாக நூறிலிருந்து ஐநூறு ரூபல்ஸ் வரை கிடைத்து வந்தது. தற்போது எனக்கு கிடைத்த கூடுதல் வருமானத்தை அல்லாஹ்வின் வழியில் கொடுக்கின்றேன்.

அல்லாஹ்விற்காக மட்டும் பொருள் தியாகம் செய்கின்ற மக்களுக்கு அவன் எவ்வாறு அருளுகின்றான்? என்பதை உணர்த்துவதற்காக நான் எடுத்து வைத்த சில சம்பவங்கள் இவை ஆகும்.

இதன் பிறகு, இனி நான் தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்கின்றேன். இந்த 88-வது ஆண்டு 31 அக்டோபருடன் முடிவடைந்துவிட்டது. நவம்பர் முதல் தேதியில் இருந்து 89-வது ஆண்டு தற்போது துவங்கியுள்ளது.

இந்த ஆண்டு தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பின் கீழ் 16.4 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகத்தை ஜமாஅத் செய்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். வேகமாக மோசமாகி வரும் உலகின் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் இந்த வசூல் கடந்த ஆண்டைக் காட்டிலும் அல்லாஹ்வின் அருளினால் 1.1 மில்லியன் பவுண்ட்கள் அதிகம் ஆகும். அதாவது 11 லட்சம் பவுண்ட்கள் அதிகம் ஆகும்.

அல்லாஹ்வின் அருளினால் வழக்கம்போன்று இந்த வருடமும் உலகளாவிய ஜமாஅத்துகளில் ஜெர்மனி ஜமாஅத் முதலிடத்தில் உள்ளது. பாகிஸ்தானும் தியாகத்தின் அடிப்படையில் அதிக தியாகம் செய்துள்ளது. ஆனால் அங்கு பொருளாதார நிலைமைகள் மோசமாக உள்ளன. பைசாவின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதன் காரணமாக அவர்கள் பின்தங்கிவிட்டார்கள். மற்ற தியாகத்தின் அடிப்படையில் அவர்கள் முன்னோக்கியே செல்கின்றனர்.

ஜெர்மனி முன்னால் இருக்கின்றது. இருந்தாலும், அவர்களின் உள்ளூர் கரன்சியின் அடிப்படையில் பார்த்தால் அவர்களிடம் குறைவு உள்ளது. பிரிட்டன் மற்றும் அமெரிக்கா எவ்வாறு உயர்ந்து வருகின்றதோ ஒருவேளை அவர்கள் இப்படியே அதிகரித்துக் கொண்டே சென்றால் பின்னர் அவர்கள் மேலே வந்துவிடுவார்கள். அதேபோன்று கனடாவிலும் (சந்தா) அதிகரித்துள்ளது. ஆஸ்திரேலியாவிலும் அதிகரித்துள்ளது. இந்தியாவிலும் அதிகரித்துள்ளது. கானா ஜமாஅத்தின் சந்தாவும் அதிகரித்துள்ளது.

செயல்பாடுகளின் அடிப்படையில் அதிக உயர்வு ஏற்பட்டுள்ள ஏனைய ஜமாஅத்துகளும் உள்ளன. அவர்களில் குறிப்பிடத் தகுந்த ஜமாஅத்துகள் பின்வருமாறு : ஹாலந்து, ஃபிரான்சு, சுவீடன், ஜார்ஜியா, நார்வே, பெல்ஜியம், மலேசியா, நியூசிலாந்து, பங்களாதேஷ், கேர்பியாதீ, கஸகிஸ்தான், தார்தாரிஸ்தான், ஃபிலிப்பைன்ஸ், மத்திய கிழக்கின் ஒரு நாடு.

ஆஃப்ரிக்கன் ஜமாஅத்துகளில் ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் முன்னணியில் உள்ள ஜமாஅத்துகள்: முதல் இடத்தில் கானா, இரண்டாம் இடத்தில் மொரிஷீயஸ், இதுவும் ஆஃப்ரிக்கவில் உள்ளது. (அடுத்து முறையே) நைஜீரியா, புர்கினாஃபாஸ், தன்ஸானியா, கேம்பியா, லைபீரியா, உகண்டா, சிராலியோன் மற்றும் பெனின் போன்ற நாடுகள் ஆகும்.

தனிநபர் சந்தாவின் அடிப்படையில் ஜமாஅத்துகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அடுத்து பிரிட்டன். பின்னர் ஆஸ்திரேலியா.

(சந்தாவில்) பங்குபெறக் கூடிய மொத்த நபர்களின் எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளினால் பதினைந்து லட்சத்து தொன்னூற்று நான்காயிரம் ஆகும்.

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த வருடம் அதிகம் கொடுக்கக் கூடிய ஆஃப்ரிக்கன் ஜமாஅத்துகளில் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. அவற்றில், நைஜீரியா, கினிபஸாவ், கான்கோ, கினிகனாகிரி, தன்ஸானிய்யா, கான்கோ, கன்ஷாஸா, கேமரூன், ஐவரிகோஸ்ட், நைஜர், செனிகால் மற்றும் புர்கினாஃபாஸ் போன்ற நாடுகள் ஆகும்.

முதல் பதிவேட்டின் கணக்கில் அல்லாஹ்வின் அருளினால் அனைவரின் கணக்கும் தொடர்கின்றது.

ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள் பின்வருமாறு:

ரோடர்மார்க் (Rodermark), ரோட்காவ் (Rodgau), மஹ்தியாபாத், நிதா (Nidda) கூலன் (koln), ஃபோலரஸ்ஹாய்ம் (Florsheim), நோயிஸ் (Neuss), பின்னிபெர்க் (Pinneberg), ஓசோஸ்னாபர்க் (Osnabruck), ஃபிரட்பர்க் (Friedberg)

மேலும் உள்ளூர் அமாரத்துடைய ஜமாஅத்துகள் பின்வருமாறு: ஹம்பர்க் (Hamburg), ஃப்ரேங்க்ஃபர்ட் (Frankfurt), கிரோஸ் கிராவ் (Gross-Gerau), வேஸ்பாதன் (wiesbaden), டிட்ஸன் பாக் (Dietzenbanch), அடுத்து ரேய்ட் ஸ்டேட் (Reidstadt), மோர்ஃபில்டன் (Morefelden), ஃபிளோரிஸ்ஹாம் (Florsheim), டர்மெஷ்டாட் (Darmstadt) மற்றும் மன்ஹைம் (Mannheim).

பாகிஸ்தானில் பொதுவாக, வசூலின் அடிப்படையில் லாஹூர் முதலிடத்தில் உள்ளது. பின்னர் ரப்வா, அடுத்து மூன்றாவதாக கராச்சி.

மாவட்ட அளவில் முதல் பத்து மாவட்டங்கள்: அவற்றில் முதலிடத்தில் சியால்கோட் உள்ளது. பின்னர் இஸ்லாமாபாத் உள்ளது. அடுத்து முறையே குஜ்ரன்வாலா, குஜராத், உமர்கோட், ஹைதராபாத், மீர்பூர் காஸ், சர்கோதா, கோயிட்டா, லூதான்.

உமர்கோட் மற்றும் மீர்பூர் போன்ற பகுதிகள் எப்படிபட்டவை என்றால் அங்கு கடந்த நாட்களில் மழையின் காரணமாக வெள்ளமும் வந்தது. இந்தப் பகுதிகளிலும் அல்லாஹ்வின் அருளினால் அந்த மக்கள் செய்துள்ள மாபெரும் தியாகங்களாகும்.

வசூல் அடிப்படையில் அதிக தியாகம் செய்யக்கூடிய பாகிஸ்தானின் நகர்புற ஜமாஅத்துகள் இவையாகும்:

அமாரத் டவுன்ஷிப் லாஹூர், அமாரத் தாருத் திக்ர் லாஹூர், அமாரத் மாடல்டவுன் லாஹூர், அமாரத் முகல்பூரா லாஹூர், அமாரத் அல்லாமா இக்பால் டவுன் லாஹூர், அமாரத் பைத்துல் ஃபஸ்ல் ஃபைஸலாபாத் அடுத்து, அமாரத் அஸீஸாபாத் கராச்சி, அமாரத் டில்லிகேட் லாஹூர், அமாரத் கரீம் நகர் ஃபைஸலாபாத், கடைசி பத்தாவது இடத்தில் அமாரத் சத்ர் கராச்சி.

பிரிட்டனின் முதல் ஐந்து மண்டலங்கள் இவையாகும். அவற்றில் முதல் இடம் வகிப்பது பைத்துல் ஃபுதூஹ், இரண்டாம் இடத்தில் இஸ்லாமாபாத் பின்னர் முறையே மஸ்ஜித் ஃபஸ்ல், மிடிலேண்ட்,பைத்துல் இஹ்ஸான்.

ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் பிரிட்டனின் முதல் பத்து ஜமாஅத்துகள்:

franham, south cheam, இஸ்லாமாபாத், வோஸ்டர்பார்க் (Worcester park), வால்ஷால்( Wallsall), கில்லிங்கேம் (Gillingham), மஸ்ஜித் ஃபஸ்ல்,ஆல்டர்ஷாட் சவுத் (Aldershot south), புட்னீ (putney).

ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் சிறிய ஜமாஅத்துகள் உள்ளன. அவை இவ்வாறு ஆகும். ஸ்பெயின் வேலி, கேத்லி நார்த். வேல்ஸ், நார்த் ஹேமில்டன், சவான்ஸி.

ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் அமெரிக்காவில் ஜமாஅத்துகள்:

முதல் இடத்தில் மேரிலேண்ட் (Maryland), பின்னர் லாஸ் ஏஞ்சல்ஸ் (Los Angels), பின்னர் நார்த் விர்ஜீனியா, பின்னர் டேட்ராயிட் (Detroit), சிலிகான்வேலி (silicon velly), சிகாகோ (chicago), ஸியாட்டில் (seattle), ஓஷ்கோஷ் (Oshkosh), பின்னர் சவுத் விர்ஜீனியா (south virgina), அட்லாண்டா (Altlanta), ஜார்ஜியா (Georgia), நார்த் ஜர்ஸி, யார்க் (Yark) .

ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் கனடாவின் உள்ளூர் அமாரத் ஜமாஅத்கள்:

வாகன் (vaughan) முதலிடத்தில் உள்ளது. பின்னர் பீஸ் வில்லேஜ் (Peace

village), பின்னர் கேல்கரி (Calgary), வான்கூவர் (Vancouver), டொரன்டோ (Toronto).

தியாகத்தின் அடிப்படையில் இந்தியாவின் உள்ளூர் அமாரத் ஜமாஅத்துகள்:

**முதல் இடத்தில் கோயம்பத்தூர் (coimbatore) தமிழ்நாடு,** அடுத்து **காதியான்,** பின்னர் ஹைதராபாத், கருளை (Karulai), பத்தப்பிரியம், அடுத்து கோழிக்கோடு, பெங்களூர், **மேலப்பாளையம்,** கொல்கத்தா, கேரங்க்.

அடுத்து, தியாகங்களின் அடிப்படையில் (முதல்) பத்து மாநிலங்கள் பின்வருமாறு:

அவற்றில், முதல் இடத்தில் கேரளா, அடுத்து (முறையே) **தமிழ்நாடு,** கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப், பெங்கால், டில்லி, மஹாராஷ்டிரா.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்:

காஸில் ஹில் ( Castle Hill ), மெல்பர்ன் லாங்க் வரன் ( Melbourne Lang warrin ), மெல்பர்ன் பெர்விக் ( Melbourne Berwick), மார்ஸ்டன் பார்க் (Marsden Park ), அடுத்து பென்ரித் ( Penrrith ), பாராமாடா ( Parramatta), அடிலய்ட் வெஸ்ட் (Adelaide west), ஏசி டி கேன்பரா (ACT Canberra), பர்ஸ்பன் லோகன் ஈஸ்ட்.

ஆக, இவை ஜமாஅத்தின் நிலவரங்கள். அல்லாஹ் பொருள் தியாகம் செய்யக்கூடிய அனைவரின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் எல்லையற்ற அருட்களை வழங்குவானாக.

யூ.கேவின் ஜமாஅத் புதிய வெப்சடை ஒன்றையும் தொடங்கியுள்ளது .அது யூ.கேவில் (நமது) ஜமாஅத்தின் வரலாறு பற்றியதாகும். வரலாற்றை பதிகின்ற இந்த பணி பல வருடங்களாக நடைபெற்று வந்தது. மேற்கத்திய உலகில் நேர்வழியைப் பரப்புவதை முழுமை செய்கின்ற ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முயற்சிகளைக் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள வெப்சைட்டில் வெளியிடப்பட்டுள்ளன. சவ்த்ரி ஃபத்ஹ் முஹம்மது சாஹிப் ஸியால் அவர்கள் இங்கு 1913-ஆம் ஆண்டு வருகை தந்தது முதல் யூ.கேவின் வரலாற்றின் ஆரம்பம் எனக் கருதப்படுகின்து. அதேநேரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சான்றுகளை முழுமை செய்யும் நோக்கத்துடன் கடிதம் ஒன்றையும், எட்டாயிரம் பிரதிகளில் ஆங்கில பிரசுரம் ஒன்றையும் அச்சிட்டு இந்தியா மற்றும் இங்கிலாந்தில் உள்ள பிரபலங்களுக்கும், கண்ணியத்திற்குரிய பாதிரிமார்களுக்கும், பல்வேறு மார்க்கத் தலைவர்களுக்கும் மேலும் எங்கெல்லாம் அந்தக் காலத்தில் அந்த தூதுச் செய்தி சென்றடைவது சாத்தியமானதாக இருந்ததோ அனுப்பி வைத்திருந்தார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தூதுச் செய்தி அன்னாரின் முஜத்தித் வாதத்துடன் யூ.கே மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளில் அன்னாரின் காலத்திலேயே சென்றடைந்துவிட்டது. அதற்கான ஓர் உதாரணம் இந்த சம்பவமாகும். அதாவது, யூ.கேவில் ஓர் அரசியல்வாதியாகவும், நாத்திகராகவும் இருந்த சார்லஸ் பிரேட்லா (Charles Bradlaugh) வின் பெயரில் 1885 ஆம் ஆண்டு அன்னார் (அலை) இஸ்லாத்திற்கு அழைப்புக் கொடுத்திருந்தார்கள். அதைப் பற்றி இங்குள்ள கார்க் கான்ஸிடியூசன் ( Cork Constitution) என்ற செய்தித்தாள் தனது ஜீன் 8, 1885 அன்றைய இதழில் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று, தியோஸோபிஸ்ட் (Thesophist) சமூகத்தின் ஒரு நிறுவனரான ஹென்றி ஸ்டீல் ஆல்காட் (Henry steel Olcott) என்பவருக்கும் அந்த அழைப்பு 1886 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றிருந்தது. அதனைப் பற்றி அவர் தியோஸோபிஸ்ட் என்ற தனது செய்தித் தாளின் 1886 ஆண்டு செப்டம்பர் இதழில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெப்சைட்டில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தின் ஒரு டைம்லைன் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்கத்திய உலகிற்கு உண்மையை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் (pioneer) முன்னணி பிரச்சாரகர்களின் பெயரில் மற்றொரு டைம் லைன் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகள் உட்பட ஜமாஅத்தின் முபல்லிக்மார்களின் அறிமுகம் மற்றும் யூ.கேவில் அவர்களின் தொண்டுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிரி பிகட் (pigott) தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளை பற்றிய ஒரு விரிவான ஆய்வுக் கட்டுரை அனைத்து சான்றுகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. அதேபோன்று வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இன்னும் பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. தங்களுடைய முன்னோர்கள் இந்த நாடுகளுக்கு வருகை தந்ததன் அசல் நோக்கம் என்னவாக இருந்தது என்பதை அக்கட்டுரைகள் இளைய தலைமுறையினருக்கு தெளிவுபடுத்தும்.

**இந்த வலைதளத்தின் முகவரி:**

**history.ahmadiyya.uk**

இன்று முதல் இந்த வலைதளமும் தொடங்கப்படுகிறது. இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் முறையாக இதனை இன்று துவங்கி வைக்க விரும்புகின்றார்கள். நம்முடைய மக்களுக்கும், நம்மவர்களுக்கும், ஜமாஅத் அல்லாதவர்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக அல்லாஹ் இதனை ஆக்குவானாக. (ஆமீன்)

தமிழாக்கம்:

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

*குத்பா பேருரை : 12ம் பக்கத் தொடர்ச்சி*

அன்னார் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ்விற்கு கட்டளையிட்டார்கள்.

அன்னார் அந்தக் கட்டளையை செயல்படுத்திவிட்டார்கள். ஆனால், ஆதிகாவின் பிரிவால் மிகவும் வேதனை நிறைந்த கவிதைகளை கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காதுகள் வரை அந்தக் கவிதைகள் சென்றடைந்தபோது அன்னாரின் உள்ளம் மாறியது. எனவே ஹஸ்ரத் அப்துல்லாஹ்விற்கு (ஆதிகாவுடன் மீண்டும் இல்லற வாழ்க்கைக்கு திரும்ப) ருஜூ செய்வதற்கு அன்னார் (ரலி) அனுமதி நல்கிவிட்டார்கள். (தாலிப் ஹாஷிம் அவர்கள் எழுதிய நூல்-ஸீரத் கலீஃபத்துர் ரஸூல் (ஸல்) ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி)) அவர்கள், பக்கம் 349-351, ஹஸனாத் அகடமி லாஹூர்)

ஹஸ்ரத் பராஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அன்னாருடைய வீட்டினுள் நுழைந்தபோது அன்னாரின் புதல்வி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் படுத்திருந்ததை நான் கண்டேன். அன்னாருக்கு காய்ச்சல் வந்திருந்தது. அப்போது, அன்னார் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கன்னத்தில் முத்தமிட்டார்கள். மேலும், எனது மகளே! நீ எப்படி இருக்கின்றாய்? என்று கேட்டதை நான் கண்டேன்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிபுல் அன்ஸார், ஹதீஸ் எண்: 3918)

இந்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களிலும் சிறிது எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

**KHAIRUL-ISLAM**

**JAYGON-WEST BENGAL 97348 44732**

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் உயரிய அந்தஸ்துகளைக் குறித்த ஈமானை வலுவூட்டும் குத்பா பேருரை**

**நிச்சயமாக மக்கள் அனைவரையும் விட தனது தொடர்பு மற்றும் தனது செல்வத்தின் மூலமாக எனக்கு நன்மை செய்யக் கூடியவர் அபூக்ரே ஆவார். நான் எனது சமுதாயத்திலிருந்து ஒருவரை கலீல் எனும் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டிருந்தால் நான் அவரையே ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆனால் இஸ்லாத்தில் சகோதரத்துவம் மற்றும் நேசம் மட்டுமே உள்ளது. அபூபக்ருடைய வாசலைத் தவிர, மஸ்ஜிதுடைய அனைத்து வாசல்களும் அடைக்கப்படட்டும் (நபி மொழி)**

**ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மக்களில் எல்லாரையும் விட அதிகமாக அரேபியர்களின் குடும்ப பரம்பரைகளை அறிந்திருந்தார்கள்**

**மக்கா வாசிகளின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களில் மிகச் சிறந்த நபர்களைச் சேர்ந்தவராக இருந்தார்கள்**

**அல்லாஹ் தனது அடையாளங்களின் வெளிப்பாடகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழமைக்காக அன்னாரைத் தேர்ந்தெடுத்தான். மேலும் அன்னாருடைய உண்மை மற்றும் உறுதிப்பாட்டின் காரணமாக அன்னாரை புகழ்ந்தான்**

**எதிரிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்மையையும், நல்லொழுக்கத்தையும் ஒப்புக் கொண்டிருந்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 11 நவம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு நுபுவ்வத் மாதம் **11ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வந்தது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டன. அது தொடர்பான அறிவிப்புகளில் இந்த விஷயமும் இடம்பெற்றுள்ளது. அதாவது, அன்னார் குடும்ப பரம்பரைகளை எடுத்துரைப்பதில் வல்லுநராக இருந்தார்கள். மேலும் கவிதைகளில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், அரேபியர்களின் குடும்ப பாரம்பரியத்தைக் குறித்து மக்களில் எல்லாரையும் விட அதிகம் அறிந்தவர்களாக இருந்தார்கள்.

இந்தக் கலையில் அதாவது குடும்ப பரம்பரைகளை எடுத்துரைக்கும் அறிவில் ஜுபைர் பின் முத்அதம் என்பவர் உச்சத்தை அடைந்திருந்தார். குடும்ப பரம்பரையை எடுத்துரைக்கும் அறிவை குறிப்பாக குரைஷியர்களுடைய பரம்பரையைக் குறித்து நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன் என்று அவர் கூறினார். ஏனெனில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) குரைஷியர்களில் அவர்களின் குடும்ப பாரம்பரியம் மற்றும் அவர்களின் பரம்பரையில் இருந்த நன்மை, தீமைகளைக் குறித்து எல்லாரையும்விட அதிகமாக அறிந்தவராக இருந்தார்கள். மேலும், அன்னார் (ரலி), குரைஷியர்களின் தீமைகளைப் பற்றி குறிப்பிட்டது கிடையாது. இதன் காரணமாகவே ஹஸ்ரத் அகீல் பின் அபீதாலிப் (ரலி) அவர்களுடன் ஒப்பிடும்போது அன்னார் (ரலி) அந்த மக்களுக்கு மத்தியில் மிகவும் ஒப்புக் கொள்ளப்பட்டவராக இருந்தார்கள். அதாவது, குரைஷியர்களில் மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபராக இருந்தார்கள். ஹஸ்ரத் அகீல் (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பிறகு, குரைஷியர்களின் குடும்ப பரம்பரை, அவர்களின் முன்னோர்கள் மற்றும் அவர்களின் நன்மை, தீமைகளைக் குறித்து மிக அதிகமாக அறிந்தவராக இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்களை குரைஷியர்கள் வெறுத்து வந்தனர். ஏனெனில் அன்னார் குரைஷியர்களின் தீமைகளை கணக்கிட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அகீல் (ரலி) மஸ்ஜித் நபவிய்யில் பரம்பரை பெயர், அரேபியர்களின் நிலைமை மற்றும் சம்பவங்கள் ஆகியவற்றைக் குறித்த அறிவைப் பெறுவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அமர்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தங்களில் மிகச் சிறந்த மக்களைச் சேர்ந்தவராக இருந்தார்கள் என்பதே மக்கா வாசிகளின் பார்வையாக இருந்தது. எனவே, அவர்களுக்கு எப்போது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உதவி கேட்டு வந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பிய்யா, தொகுதி 1-பக்கம் 390, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2002)

கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனைவரையும் விட அரேபியர்களின் பரம்பரைக் குறித்து அதிலும் குறிப்பாக குரைஷியர்களின் பரம்பரையைக் குறித்து அதிக அறிவு இருந்தது. குரைஷிய கவிஞர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக அவதூறு கவிதைகள் கூறியபோது, கவிதைகள் மூலமே அவர்களின் அவதூறுகளுக்கு பதில் கொடுக்கும் தொண்டு ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, நான் சுயமே குரைஷியர்களைச் சேர்ந்தவராக இருக்கும்போது நீங்கள் எவ்வாறு குரைஷியர்களை இகழ்ந்து கவிதைகளை கூறுவீர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கோதுமை மாவிலிருந்து அல்லது வெண்ணையிலிருந்து முடியை அகற்றுவது போன்று நான் தங்களை (அந்தக் கவிதைகளில்) அவர்களிலிருந்து அகற்றிவிடுவேன் என்று பணிவுடன் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள்:

நீங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் செல்லுங்கள். மேலும், குரைஷியர்களின் பரம்பரையைக் குறித்து அன்னாரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

பின்னர் நான் கவிதை எழுதுவதற்கு முன்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றேன். மேலும் அன்னார் (ரலி) குரைஷியர்களில் ஆண்கள் மற்றும் பெண்களைக் குறித்து வழிகாட்டல் வழங்கி வந்தார்கள் என்று ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். எனவே, ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்களுடைய கவிதைகள் மக்காவிற்கு சென்றடையும்போது, இந்த கவிதைகளுக்குப் பின்னால் அபூபக்ருடைய வழிகாட்டலும், ஆலோசனையும் உள்ளது என்று மக்கா வாசிகள் கூறிவந்தனர். (ஸீரத் ஸய்யிதுனா ஸித்தீகே அக்பர், உமர் அபூ அந்நஸ்ர், உருது மொழியாக்கம்-பக்கம் 817-818)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குடும்ப பரம்பரையைக் குறித்த கல்வியைப் போன்று அரேபியர்களின் நாட்களை அதாவது அரேபியர்கள் தங்களுக்குள் போர் புரிந்து கொண்ட வரலாற்றைக் குறித்தும் அறிந்த மாபெரும் அறிஞராக இருந்தார்கள்.

அதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முறையான கவிஞராக இருக்கவில்லையென்றாலும், கவிதைகளில் அன்னாருக்கு ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள், முறைப்படி அன்னார் (ரலி) கவிதைகள் கூறிவந்தார்களா? அல்லது இல்லையா? என்று விவாதம் செய்துள்ளனர். சில வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் மறுத்துள்ளார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கவிதைகள் கூறியிருக்கலாம். எனினும் சில வரலாற்றாசிரியர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சில கவிதைகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். அதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கவிதைகளை உள்ளடக்கிய, இருபத்தி ஐந்து கஸீதாக்களைக் கொண்ட, ஒரு கடிதத் தொகுப்பு துருக்கியைச் சேர்ந்த ஒரு நூலகத்திலிருந்து கிடைத்துள்ளது. அங்கு அது இருக்கின்றது. அவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கவிதைகள் என்று

கூறப்படுகின்றது. அதை எழுதக்கூடியவர் இந்த அளவிற்கு எழுதியுள்ளார். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்தக் கவிதைகள் குறித்து இல்ஹாமிய ஒப்புதல் தனக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சில கவிதைகளை கூறிவந்தார்கள் என்றே தப்காதே இப்னு ஸஅத் மற்றும் ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம் எழுதியுள்ளனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது, அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கவிதைகளாக இவை கூறப்படுகின்றன. அதாவது மொழியாக்கம் இவ்வாறாகும். கண்ணே! ஈருலகத் தலைவரின் மரணத்திற்காக அழுவதன் உரிமை குறித்து நான் ஆணையிடுகின்றேன்! நீ அழுது கொண்டே இரு ! இனி உனது கண்ணீர் ஒருபோதும் நிற்கக் கூடாது. கண்ணே! கந்தஃப்! அதாவது மாலைநேரத்தில் மண்ணறையில் மறைக்கப்பட்டுவிட்ட குரைஷியர்களின் சிறந்த மகனுக்காக கண்ணீர் சிந்து ! எனவே அரசர்களுக்கெல்லாம் அரசனான, அடியார்களின் தலைவரான அன்னார் (ஸல்) மீது இறைவணக்கம் செய்யும் மக்களுடைய இறைவனின் தரூத் உண்டாகட்டுமாக! எனவே நேசரை விட்டு பிரிந்து விட்ட பிறகு இனி என்ன வாழ்க்கை ! பத்து உலகங்களுக்கு அழகு வழங்கக் கூடிய இருப்பை பிரிந்த பிறகு இனி என்ன அலங்காரம் உள்ளது! எனவே நாம் எப்படி வாழ்வில் ஒன்றாகவே இருந்தோமோ (அதேபோன்று) அந்தோ! மரணம் நம் அனைவரையும் ஒன்றாகவே தழுவியிருக்க வேண்டுமே! (ஸீரத் ஸய்யதுனா ஸித்தீகே அக்பர்-நூலாசிரியர்: உமர் அபூ அந்நஸ்ர், உருது மொழியாக்கம்-பக்கம் 818-822) இவை அந்த கவிதைகளின் மொழியாக்கம் ஆகும்.

அன்னாரின் அகப்பார்வைக் குறித்து வருகின்றது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் அகப்பார்வைக் கொண்டவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் (தனது) ஓர் அடியாருக்கு உலகத்தி(ல் இருப்பத)ற்கு அல்லது அல்லாஹ்விடம் உள்ள அந்த விஷயத்திற்கு (இரண்டிற்கும் அதிகாரம்) வழங்கினான். (ஆனால்) அந்த அடியார் அல்லாஹ்விடம் உள்ள விஷயத்திற்கு விருப்பம் கொண்டார்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுதார்கள். எனவே இந்த பெரியவர் எதனால் அழுகின்றார்? உலகம் அல்லது தன்னிடம் உள்ளதை (இரண்டில் ஒன்றை) விரும்புவதற்கு அல்லாஹ் அந்த அடியாருக்கு அதிகாரம் வழங்கியிருந்தான். எனவே கம்பீரமிக்க அல்லாஹ்விடம் உள்ளதை அந்த அடியார் தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்று நான் எனது உள்ளத்தில் கூறினேன். ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே அந்த அடியாராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்கள் எல்லாரையும் விட அதிக ஞானம் படைத்திருந்தார்கள்.

அபூபக்ரே ! அழாதீர் ! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். தொடர்ந்து அன்னாருடைய அறிவிப்பில் ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்கள் கூறியதாக வருகிறது:

அபூபக்ரே ! அழாதீர் ! நிச்சயமாக அனைத்து மக்களிலும் அதிகமாக தனது தோழமையாலும், தனது செல்வத்தாலும் எனக்கு நன்மை செய்யக் கூடியவர் அபூபக்ரே ஆவார். நான் எனது சமுதாயத்தில் ஒருவரை நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டிருந்தால் நான் அபூபக்ரையே ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆனால், இஸ்லாத்தில் சகோதரத்தும் மற்றும் நேசமும் மட்டுமே உள்ளது. மஸ்ஜிதில் அபூபக்ருடைய வாசலைத் தவிர மற்ற அனைத்து வாசல்களும் அடைக்கப்பட்டட்டும்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுஸ் ஸலாத், அறிவிப்பு எண்: 466)

அகப்பார்வை தொடர்பாக இந்த அறிவிப்பு மீண்டும் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வாசல்கள் தொடர்பான அறிவிப்பை நான் முன்னரும் கூறியிருக்கின்றேன். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதனை நான் பின்னர் எடுத்துரைப்பேன். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதே சம்பவத்தை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வின் இறுதி நாட்கள் வந்தபோது, ஒருநாள் அன்னார்(ஸல்) சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக எழுந்து நின்றார்கள். சஹாபிகளை நோக்கி கூறினார்கள்:

மக்களே! அல்லாஹ்வின் ஓர் அடியார் இருக்கின்றார். அவரிடம் அவரது இறைவன் கூறினான்: எனது அடியானே! நான் உனக்கு அதிகாரம் வழங்குகின்றேன். நீர் விரும்பினால் உலகில் இருக்கலாம். மேலும் நீர் விரும்பினால் என்னிடம் வந்து விடலாம். அப்போது அந்த அடியார் இறைவனுக்கு அருகில் செல்வதை விரும்பினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதைக் கூறியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கிவிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறப்படுகிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீர் விரும்பினால் உலகில் இருக்கலாம். நீர் விரும்பினால் அல்லாஹ்விடம் சென்று விடலாம் என்று அல்லாஹ் ஓர் அடியாருக்கு அதிகாரம் வழங்கினான். அந்த அடியார் இறைவனுக்கு அருகில் செல்வதை தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யாரோ ஓர் அடியாரின் சம்பவத்தைதானே எடுத்துரைத்து வருகின்றார்கள். இந்த முதியவர் ஏன் அழுகின்றார்? என்று எனக்கு அவரது அழுகையைப் பார்த்து மிகவும் கோபம் வந்தது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு தேம்பி தேம்பி அழுதார்கள் என்றால், அந்த அழுகை நிற்கவே இல்லை. இறுதியில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அபூபக்ர் மீது எனக்கு எவ்வளவு நேசம் உள்ளது என்றால், இறைவனைத் தவிர வேறு ஒருவரை நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொள்வது ஆகுமானதாக இருந்திருந்தால் நான் அபூபக்ரை ஆக்கிக் கொண்டிருப்பேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு மரணமடைந்துவிட்டார்கள். அப்போதுதான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சரியாகவே அழுதுள்ளார்கள். எமது கோபம் முட்டாள்தனத்தின் அடையாளமாக இருந்தது என்பதை நான் புரிந்து கொண்டேன். (அன்வாருல் உலூம்-உஸ்வா ஹஸனா, தொகுதி 17-பக்கம் 102)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ

என்ற வசனத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓதியபோது, திருக்குர்ஆன் ஞானத்தைப் பெற்றிருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கிவிட்டார்கள். இந்த முதியவர் ஏன் அழுகின்றார்? என ஒருவர் கேட்டார். அப்போது, எனக்கு இந்த வசனத்திலிருந்து இறைத் தூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்கான மணம் வருகின்றது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமார்கள் (ஒரு வகையில்) அதிகாரிகளாக இருக்கின்றனர். உதாரணமாக, ஏற்பாடுகளை செய்யக் கூடிய ஓர் ஊழியர் தனது பணியை செய்து முடித்துவிட்ட பிறகு அவர் அங்கிருந்து சென்றுவிடுகின்றார். அதேபோன்று நபிமார்கள் எந்த பணியை செய்வதற்காக உலகிற்கு வருகின்றார்களோ அதனை அவர்கள் செய்து முடித்து விட்ட பிறகு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு விடுகின்றனர். எனவே اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ என்ற ஒலி வந்தபோது, இது இறுதி ஒலி ஆகும் என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். இதிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஞானத்தில் முன்னேறியிருந்தார்கள் என்பதை தெளிவாக புலப்படுகிறது.

மஸ்ஜிதுடைய அனைத்து ஜன்னல்களையும் அடைத்து விடுங்கள் என்று ஹதீஸில் வந்துள்ளதை பொருத்த வரை, இந்த ஜன்னல்களுக்கான விளக்கத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வழங்கிவிட்டார்கள். அதாவது, ஜன்னால்களை அடைப்பதன் பொருள் என்ன? என்பதை விளக்கிவிட்டார்கள்.

கூறினார்கள்: மஸ்ஜிதுடைய அனைத்து ஜன்னல்களையும் அடைத்துவிடுங்கள். ஆனால் அபூபக்ரின் ஜன்னல் திறந்திருக்கும் என்று ஹதீஸில் வந்துள்ளது. இதில் உள்ள இரகசியம் இதுவாகும். அதாவது, மஸ்ஜித் என்பது இறை இரகசியங்களின் வெளிப்பாட்டிற்கான இடமாகும். எனவே அபூபக்ருடைய சார்பாக அந்த வாசல் அடைக்கப்படாது என்பது அதன் பொருள் ஆகும்.

அல்லாஹ்வின் இரகசியங்கள், ஆழமான கருத்துகள், அல்லாஹ்வின் கூற்றுகளில் உள்ள நுட்பமான ஞானங்கள் இவை அனைத்தும் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். பிற்காலத்திலும் வெளிப்பட்டுக் கொண்டே செல்லும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபிமார்கள் உவமைகளையும், ஒப்புமைகளையும் கை கொள்கின்றனர். இல்லை. இது நேரடியான கூற்று இதற்கு

வெளிப்படையான பொருளையே கொடுக்க வேண்டும் என்று அறிவீனமான முல்லாவைப் போன்று எந்த நபர் கூறுகின்றாரோ அவர் கடும் தவறிழைக்கின்றார். உதாரணமாக, இந்த வாசல்படியை மாற்றி விடுங்கள் என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது புதல்வரிடம் கூறியது அல்லது தங்கக் காப்பு அணிவிக்கப்படும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்ற விவகாரங்களில் எல்லாம் அவற்றின் வெளிப்படையான பொருளில் அமைந்திருக்கவில்லை. மாறாக, உவமை மற்றும் ஒப்புமை வடிவில் அவை அமைந்திருந்தன. அவற்றின் கோணம் மற்றோர் உண்மைத்துவமாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக வாதம் இதுவாகவே இருந்தது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு திருக்குர்ஆன் ஞானம் மிக அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. எனவேதான் ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் அந்த விளக்கத்தை கொடுத்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனது நிலைபாடு என்னவென்றால், இந்தப் பொருள் வெளிப்படையில் எதிரானதாகவே இருந்தாலும் கூட அபூபக்ர் அவர்களின் பொருளை ஏற்றுக் கொள்வதே இறையச்சம் மற்றும் நேர்மையின் தேட்டமாக இருந்தது. அதாவது, மக்கள் அன்னார் கொடுத்த விளக்கத்தையே ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், இங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் விளக்கத்திற்கு மாற்றமாக ஒரு சொல் கூட திருக்குர்ஆனில் இல்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அபூபக்ர் புத்திசாலியாக இருந்தார்களா? இல்லையா? என்று மவ்லவிகளிடம் கேளுங்கள். அன்னார் ஸித்தீக் என்று அழைக்கப்பட்ட அந்த அபூபக்ரராக இருந்தார்களா? இல்லையா? எல்லாரையும் விட இறைத் தூதரின் முதல் கலீஃபாவாக அன்னார் ஆனார்களா? இல்லையா? கடுமையான மார்க்கப் புறக்கணிப்பு எனும் கடுமையான தொற்று நோயை அன்னார் தடுத்து நிறுத்தி இஸ்லாத்திற்கு பெரும் தொண்டுகள் ஆற்றினார்களா? இல்லையா?

கூறுகின்றார்கள்: சரி! மற்ற எல்லா விஷயங்களையும் விட்டு விடுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சொற்பொழிவு மேடை மீது ஏறுவதற்கு என்ன அவசியம் வந்தது? அடுத்து இறையச்சத்துடன் கூறுங்கள்.

مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوۡلٌ قَدۡ خَلَتۡ مِنۡ قَبۡلِهِ الرُّسُلُ

(ஆலி இம்ரான்:145) என்ற வசனத்தை அன்னார் (ரலி) ஓதினார்கள் என்றால் அதிலிருந்து முழுமையான விளக்கத்தை கொடுக்கவா? அல்லது ஈஸாவை மரணித்தவராக கருதும் ஒருவர் காஃபிர் ஆகிவிடுகின்றார் என்ற குறைபாடுடைய விளக்கத்தை கொடுக்கவா? அது குறைபாடுடையது என்பதை ஒரு குழந்தை கூட கூறிவிடும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 441-442, பதிப்பு 1984)

அதாவது, ஒரு மிகத் தெளிவான, வலிமையான சான்றை வழங்குவதற்காகவே அந்த வசனத்தை அன்னார் ஓதினார்களே தவிர பலவீனமான சான்றை வழங்குவதற்காக அல்ல.

அடுத்து ஒரு சந்தர்ப்பத்தில் இதே விஷயத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

اَلۡيَوۡمَ اَكۡمَلۡتُ لَكُمۡ دِيۡنَكُمۡ

என்ற வசனம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. உங்களை தூய்மைபடுத்திவிட்டான் என்பது ஒன்று. இரண்டாவது (அம்சம்), முழுமையான வேதத்தை வழங்கிவிட்டான் என்பதாகும்.

கூறுகின்றார்கள்: இந்த வசனம் இறங்கியபோது அபூபக்ர் அழத் தொடங்கிவிட்டார்கள். முதியவரே! ஏன் அழுகின்றீர் என்று ஒருவர் கேட்டார். அதற்கு இந்த வசனத்தின் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மரணத்தின் வாசம் வருகிறது என்று அன்னார் (ரலி) பதில் அளித்தார்கள். ஏனெனில் பணி முடிந்துவிடும்போது அது நிறைவடைவதே மரணத்தை வலியுறுத்துகின்றது. உதாரணமாக, உலகில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அது முடிந்தவுடன் ஊழியர்கள் அங்கிருந்து சென்று விடுகின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நிலைமையைக் கேட்டபோது, எல்லாரையும் விட அபூபக்ர் மிகவும் புரியக் கூடியவர் ஆவார் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள்: நான் உலகில் ஒருவரை நெருங்கிய நண்பராக ஆக்கியிருந்தால் அபூபக்ரை ஆக்கிக் கொண்டிருப்பேன். அபூபக்ரின் ஜன்னல் மஸ்ஜிதில் திறந்து இருக்கட்டும். மற்ற அனைவரின் ஜன்னல்களையும் அடைத்து விடுங்கள்.

இதில் என்ன ஒப்புமை உள்ளது? மேலும், நண்பராக ஆக்கிக் கொண்டிருப்பேன், பின்னர் ஜன்னல் திறந்திருக்கும் ஆகியவற்றின் பொருள் என்ன? என்று ஒருவர் கேட்கலாம்.

அன்னார் (அலை) அந்த ஒப்புமையை எடுத்துக் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். மஸ்ஜித் என்பது இறையில்லம் ஆகும். மேலும் அது அனைத்து உண்மைத்துவம் மற்றும் இறைஞானத்தின் தலையாய ஊற்று ஆகும். எனவே கூறினார்கள்: அபூபக்ருடைய உட்புற ஜன்னல் இதன் பக்கம் இருக்கின்றது. எனவே இந்த ஜன்னலையும் வைக்கப்படட்டும். மற்ற ஸஹாபிகள் இழப்பிற்குரியவர்களாக இருந்தனர் என்பது இதன் பொருள் அல்ல. அவர்களிலும் பெரும் பெரும் அகப்பார்வை கொண்ட நபர்கள் இருந்தனர். ஆனால், அந்த விஷயம் எல்லாரையும் விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அதிகம் இருந்தது. இன்னும் கூறப்போனால், அபூபக்ர் (ரலி) அவர்களின் வடிவம் مَجۡمُوۡعَةُ الۡفِرَاسَتَيۡنِ (அகப்பார்வையின் தொகுப்பு) என்பதாக இருந்தது.

அடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

(ஹஸ்ரத் அபூபக்ர்) ஸித்தீக் (ரலி) அவர்கள் அனுபவம் படைத்த, அகப்பார்வை மிக்க மக்களைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) மிகவும் சிக்கலான விவகாரங்கள் மற்றும் அவற்றின் கடினங்களைக் சந்தித்தார்கள். பல போர்களில் கலந்து கொண்டார்கள். மேலும் அவர்களின் போர் தந்திரங்களை கண்டார்கள். அன்னார் பல பாலைவனங்களையும், மலைகளையும் கடந்தார்கள். அழிவிற்குரிய இடங்கள் எத்தனை இருந்தன! அவை அனைத்திலும் அன்னார் உள்ளே நுழைந்து விட்டார்கள். எத்தனையோ கோணலான பாதைகள் இருந்தன. அதனை அன்னார் (ரலி) நேராக்கினார்கள். மேலும், பல போர்களில் அன்னார் (ரலி) முன்னால் சென்றார்கள். எத்தனையோ குழப்பங்களுக்கு அன்னார் முடிவு கட்டினார்கள். எத்தனையோ பயண விலங்குகளை மெலிவடையச் செய்தார்கள். அதாவது அன்னார் எண்ணற்ற பயணங்கள் செய்தார்கள். அதன் காரணமாக பயண விலங்குகள் சோர்வடைந்து விட்டன. ஏராளமான இடங்களை சென்றடைந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னார் அனுபவம் படைத்தவராகவும், அகப்பார்வை கொண்டவராகவும் ஆகிவிட்டார்கள். அன்னார் (ரலி) துன்பங்களின் போது பொறுமை செய்யக்கூடியவராகவும், ஆட்சியாளராகவும் இருந்தார்கள். எனவே அல்லாஹ் அன்னாரை தனது அடையாளங்களின் சேருமிடமான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழமைக்காக தேர்ந்தெடுத்தான். மேலும், அன்னாரின் உண்மை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் காரணமாக அன்னாரை அல்லாஹ் பாராட்டினான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பர்கள் அனைவரையும் விட அன்னாரே மிகைத்து இருக்கின்றார்கள் என்பதை இந்த விஷயம் சுட்டிக் காட்டுகின்றது. அன்னார் சுதந்திரமானவராகப் பிறக்க வைக்கப்பட்டார்கள். நன்றியுணர்வு அன்னாருக்கு ஊட்டப்பட்டிருந்தது. இந்த காரணத்தாலேயே அன்னார் அபாயகரமான, முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களிலும் அச்சம் நிறைந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் அல்லாஹ் நன்கறிந்தவனாகவும், நுட்பமான ஞானம் கொண்டவன் ஆவான். அவன் அனைத்து விவகாரங்களையும் அவர்களின் சூழல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப ஏற்படுத்துகின்றான். மேலும், அதற்கேற்ப தண்ணீரை அவற்றின் ஊற்றுகளிலிருந்து வெளிப்படுத்துகின்றான். எனவே அவன் இப்னு அபீ கஹாஃபாவின் மீது கருணையின் பார்வையை செலுத்தினான். மேலும் அவர் மீது சிறப்பான கருணை காட்டினான். மேலும், அவரை தனித்த ஆளுமைமிக்க நபராக ஆக்கிவிட்டான்.

மேலும், அல்லாஹ் கூறுகின்றான். பேசுகின்ற அனைவரையும் விட அவன் மிகவும் உண்மையாளன் ஆவான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

اِلَّا تَنۡصُرُوۡهُ فَقَدۡ نَصَرَهُ اللّٰهُ اِذۡ اَخۡرَجَهُ الَّذِيۡنَ كَفَرُوۡا ثَانِىَ اثۡنَيۡنِ اِذۡ هُمَا فِى الۡغَارِ اِذۡ يَقُوۡلُ لِصَاحِبِهٖ لَا تَحۡزَنۡ اِنَّ اللّٰهَ مَعَنَا‌ ۚ فَاَنۡزَلَ اللّٰهُ سَكِيۡنَـتَهٗ عَلَيۡهِ وَاَيَّدَهٗ بِجُنُوۡدٍ لَّمۡ تَرَوۡهَا وَجَعَلَ كَلِمَةَ الَّذِيۡنَ كَفَرُوا السُّفۡلٰى‌ ؕ وَكَلِمَةُ اللّٰهِ هِىَ الۡعُلۡيَا‌ ؕ وَاللّٰهُ عَزِيۡزٌ حَكِيۡمٌ

பொருள்: நீங்கள் இந்தத் தூதருக்கு உதவி செய்யவில்லையாயின், நிராகரிப்பவர்கள் அவரை இருவருள் ஒருவராக இருந்த நேரத்தில் வெளியேற்றிய அந்த நேரத்திலும், அவ்விருவரும் குகையில் இருந்தபோது அவர் தம்முடைய நண்ப(ர் அபூபக்க)ரிடம் கவலைப்படாதீர். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறிக் கொண்டிருந்த நேரத்திலும் அல்லாஹ் அவருக்கு உதவி செய்துள்ளான் (என்பதனை நினைவில் கொள்ளுங்கள்). பின்னர்

அல்லாஹ் அவருக்குத் தனது அமைதியினை இறக்கி நீங்கள் காணாத படைகளைக் கொண்டு அவன் அவருக்கு உதவி செய்து, நிராகரிப்பவர்களின் வார்த்தையை மிகவும் கீழ்த்தரமானதாக்கிவிட்டான். அல்லாஹ்வின் வார்த்தையே எப்போதும் மிக உயர்ந்தது. அல்லாஹ் மிகைத்தவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். (9:40)

(சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 60-62, ரூஹானி கஸாயீன், தொகுதி 8, பக்கம் 339)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கனவிற்கு விளக்கம் கொடுக்கும் கலையையும் அறிந்திருந்தார்கள். எழுதப்பட்டுள்ளது: கனவு விளக்கம் எனும் ஞானத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மிகவும் புலமைப் பெற்றிருந்தார்கள். கனவிற்கு விளக்கம் கொடுக்கும் ஞானத்தில் எல்லாரையும் விட அன்னார் (ரலி) மிகவும் மேன்மை பெற்றிருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், ஹுஸுர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் அன்னார் (ரலி) கனவுகளுக்கு விளக்கம் கொடுத்து வந்தார்கள். இமாம் முஹம்மது பின் ஸீரீன் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கனவுகளுக்கு விளக்கம் கொடுக்கும் மாபெரும் அறிஞராக இருந்தார்கள். (முஹம்மது இல்யாஸ் ஆதில் அவர்களின் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) எனும் நூல்: பக்கம் 174)

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியிருந்த சில கனவுகளின் விளக்கங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போரிலிருந்து திரும்பிய சந்தர்ப்பத்தில் ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் அவர் கூறினார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் கனவில் ஒரு மேகத்தைக் கண்டேன். அதிலிருந்து நெய்யும், தேனும் வழிந்துக் கொண்டிருந்தது. மேலும், மக்கள் தங்களது கைகளில் அதனை எடுத்துக் கொண்டிருப்பதையும் நான் கண்டேன். சிலர் அதிகம் எடுத்துக் கொள்கின்றனர். சிலர் குறைவாக எடுக்கின்றனர். மேலும் நான் ஒரு கயிறைக் கண்டேன். அது வானம் வரை சென்றடைந்திருந்தது. மேலும், நான் தங்களை கண்டேன். தாங்கள் அந்தக் கயிறை பிடித்து அதன் மூலம் மேலே சென்றுவிட்டீர்கள். அதன் பிறகு மற்றொரு நபர் அந்தக் கயிறைப் பிடித்தார். அவரும் அதன் மூலமாக மேலே சென்றுவிட்டார். அதன் பிறகு, மற்றொரு நபர் வந்தார். அவரும் மேலே சென்றுவிட்டார். அதன் பிறகு மற்றொரு நபர் அந்தக் கயிறைப் பிடித்தார். மேலும் அது அறுந்துவிட்டது. பின்னர் அவருக்காக அது இணைக்கப்பட்டது. மேலும் அந்த நபர் அதன் மூலம் மேலே சென்றுவிட்டார். அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்களே! இதற்கு என்னை விளக்கம் கொடுக்க அனுதியுங்கள். அனுமதி கிடைத்தால் நான் விளக்கமளிக்கின்றேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு விளக்கம் கொடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிழலிடக் கூடிய மேகம் என்பது இஸ்லாம் ஆகும். அதிலிருந்து வழிந்துக் கொண்டிருந்த நெய் மற்றும் தேன் என்பது திருக்குர்ஆன் ஆகும். அதன் இனிமை,சுவை மற்றும் மக்கள் அதிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கின்ற தேன், நெய் என்பது திருக்குர்ஆனை பெறக் கூடியவர்கள் என்பதாகும். அதாவது திருக்குர்ஆனை அதிகமாக அல்லது குறைவாக பெறக்கூடிய மக்கள். வானம் வரை சென்றடைந்துள்ள கயிறு என்பது தாங்கள் நிலை பெற்றுள்ள உண்மை என்பதாகும். தாங்கள் (ஸல்) அவர்கள் அதனை எடுத்தீர்கள். மேலும், அதன் மூலமாக தாங்கள் (ஸல்) உயர்ந்துவிட்டீர்கள். அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு, மற்றொரு நபர் அதனை எடுப்பார். அதன் மூலம் உயர்ந்து விடுவார். பின்னர் மற்றொரு நபர் எடுப்பார். அவரும் அதன் மூலம் உயர்ந்து விடுவார். பின்னர் மற்றொருவர். மேலும் அது துண்டிக்கப்படும். பின்னர் அது அவருக்காக இணைக்கப்படும். மேலும், அவர் அதன் மூலமாக உயர்ந்து விடுவார்.

நீங்கள் சிறிது சரியாக கூறினீர்கள். சிறிது தவறிழைத்துள்ளீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களிடம் சத்தியம் செய்கின்றேன். நான் சரியாக கூறியதையும், தவறாக கூறியதையும் தாங்கள் எனக்கு கூறுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வேண்டினார்கள்.

அப்போது, அபூபக்ரே ! சத்தியம் செய்ய வேண்டாம் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாப் தஃபீருர் ருஃயா, ஹதீஸ் எண்: 3918)

அதாவது, சரியான விளக்கம் அந்த நேரத்தில் தெளிவாக வெளிப்பட்டு விடுவதை அன்னார் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. எனவே தான் சத்தியம் செய்யாதீர். நீங்கள் கொடுத்த விளக்கம் வரை போதும். இருக்கட்டும். அதுவே போதுமானதாகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்.

இப்னு ஷஹாபிடமிருந்து அறிவிப்பு வருகிறது:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கனவு ஒன்றைக் கண்டார்கள். அந்தக் கனவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முன்னால் எடுத்துரைத்தவாறு அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் ஒரு கனவில் கண்டேன். நானும், நீங்களும் ஒரு படியில் ஏறியுள்ளோம். மேலும், நான் உங்களை விட இரண்டரை படி முன்னால் சென்றுவிட்டேன்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நல்லது! தாங்கள் தங்களின் கண்களால் தங்களை மகிழ்விக்கின்ற மற்றும் இன்பமளிக்கின்ற அந்த விஷயங்களை பார்க்கும் வரை, தங்களை அல்லாஹ் உயிருடன் வைக்க வேண்டும். மேலும் தங்களின் கண்களுக்கு அல்லாஹ் குளிர்ச்சியை வழங்கட்டும். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் இதேபோன்று மூன்று முறை கூறினார்கள். மூன்றாவது முறை கூறினார்கள்: அபூபக்ரே நான் கனவில் கண்டேன். நானும் நீங்களும் ஒரே ஏணிப் படியில் ஏறியுள்ளோம். நான் உங்களை விட இரண்டரை படி முன்னால் சென்றுவிட்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தனது கருணையிலும், பாவமன்னிப்பின் பக்கமும் உயர்த்திக் கொள்வான். மேலும் நான் தங்களுக்குப் பிறகு இரண்டரை வரும் வரை உயிர் வாழ்வேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா, தொகுதி 3, பக்கம் 132, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதற்கு விளக்கமளித்தார்கள். மேலும் அதுபோன்றே நிகழ்ந்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய துணைவியார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் கனவில் எனது அறையில் மூன்று நிலவுகள் விழுவதைக் கண்டேன். எனவே நான் எனது கனவை எனது தந்தையார் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு முன்னால் எடுத்துரைத்தேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணமடைந்தபோது அன்னார் (ஸல்) அவர்களின் நல்லடக்கம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறையிலேயே நடந்தது. அப்போது, இது உமது நிலவுகளில் ஒரு நிலவு ஆகும். இது அந்த நிலவுகளில் மிகச் சிறந்தது ஆகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஃதா கிதாப் அல்ஜனாயிஸ், ஹதீஸ் எண்: 546, தாருல் ஃபிக்ர் பெய்ரூத் 2002)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் (கனவில்) கண்டேன். கறுப்பு நிற ஆடுகளின் மந்தை என்னை பின்தொடர்ந்து வருகிறது. அவற்றிற்கு பின்னால் சாம்பல் நிற ஆடுகளின் மந்தை உள்ளது.

அப்போது, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களை அரேபியர்கள் பின்பற்றுவார்கள். பின்னர் அரேபியர் அல்லாதோர் பின்தொடர்வர் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு வானவர்களும் இந்த விளக்கத்தையே வழங்கியுள்ளனர் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸன்னஃப் இப்னு அபீ ஷேபா, தொகுதி 10, பக்கம்-125, கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 31101, அல்ஃபாரூக் லில் ஹதீஸிய்யா 2008)

இது கனவுகளைப் பற்றிய குறிப்பாகும்.

இனி, ஆண்களில் யார் முதலில் முஸ்லிம் ஆனார்? என்ற குறிப்புகள் நடைபெறும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே (ஆண்களில் முதலில் முஸ்லிம்) ஆவார்கள் என்று இது தொடர்பாக கூறப்படுகின்றது. ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஐந்து அடிமைகளும், இரண்டு பெண்களும் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மட்டுமே இருந்த அந்த தொடக்க காலத்தில் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நான் கண்டேன். (ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண்: 3660)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற தமது நூலில் விளக்கமான குறிப்பு ஒன்றை எழுதியுள்ளார்கள். அதில் அன்னார் (ரலி)

எழுதுகின்றார்கள். மேலும் அதாவது முதன் முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது யார் ஈமான் கொண்டார் என்று அன்னார் (ரலி) விவாதித்துள்ளார்கள்.

ஆக, அன்னார் (ரலி) எழுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது கொள்கையை பிரச்சாரம் செய்ய தொடங்கியபோது, எல்லாரையும் விட முதலில் ஈமான் கொண்ட பெண்மணியாக ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) ஒரு நொடி கூட தாமதிக்கவில்லை. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு பிறகு ஆண்களில் எல்லாரையும் விட முதலில் ஈமான் கொண்டவர் தொடர்பாக வரலாற்றாசிரியர்களில் கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹஸ்ரத் அபூபக்ர் அப்துல்லாஹ் பின் அபீ கஹாஃபாவின் பெயரைக் குறிப்பிடுகின்றார்கள். சிலர் அந்த நேரத்தில் வெறும் பத்து வயதை அடைந்திருந்த ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றார்கள். மேலும், சிலர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமை ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றார்கள். ஆனால், எம்மை பொருத்த வரை இவை அனைத்தும் வீண் சண்டையாகும். ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டின் நபர்களாக இருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிள்ளைகளைப் போன்று அன்னாருடன் தங்கி வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் ஈமான் கொண்டார்கள். (அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன கூறினார்களோ அதன் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. எனவே, அவர்கள் ஈமான் கொள்வது பெரிய விஷயம் இல்லை. ஏனெனில் அவர்கள் வயதில் சிறியவர்களாக இருந்தனர். மேலும், குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள்.) இன்னும் கூறப்போனால் அவர்களுடைய எந்த ஒரு வாய்மொழி ஒப்புதலுக்கும் அவசியம் இல்லாமல் இருந்தது. எனவே அவர்களின் பெயர்களை இடையில் கொண்டு வருவதற்கு அவசியம் இல்லை. மற்றபடி எஞ்சியவர்களில் எல்லாரையும் விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முதன்மையானவராகவும், ஈமானில் முந்தியவர்களாகவும் இருந்தார்கள் என அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கண்ணியம் மற்றும் தகுதியின் அடிப்படையில் குரைஷியர்களில் மிகவும் மரியாதைக்குரியவராகவும், கண்ணிய மிக்கவராகவும் இருந்தார்கள். மேலும், இஸ்லாத்தில் வேறு எந்த சஹாபிக்கும் கிடைத்திராத அந்தஸ்து அன்னாருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாதத்தில் ஒரு நொடிப் பொழுது கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சந்தேகம் கொள்ளவில்லை. மாறாக, செவியேற்ற உடனேயே ஒப்புக் கொண்டு விட்டார்கள். மேலும், அதன் பிறகு அன்னார் தமது முழு கவனத்தையும், தமது உயிரையும், தமது செல்வத்தையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக அர்ப்பணித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அதிகம் அன்பு கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு அன்னாருடைய முதல் கலீஃபாவாக ஹஸ்ரத் அபூபகர் (ரலி) அவர்கள் ஆனார்கள். மேலும், தமது கிலாஃபத்தின் காலத்திலும் அன்னார் தமது எண்ணற்ற திறமைகளுக்கு சான்று பகர்ந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து ஐரோப்பாவின் பிரபல எழுத்தாளர் ஸ்பிரிங்கர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் தொடக்கத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டது என்பது, முஹம்மது (ஸல்) அவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகக் கூடியவராக கூட இருக்கக் கூடும். ஆனால், அவர் ஒருபோதும் ஏமாற்றக் கூடியவர் அல்ல என்ற விஷயத்திற்கு மாபெரும் சான்றாகும். இன்னும் கூறப்போனால், உண்மையான உள்ளத்துடன் சுயமே தன்னை இறைவனின் தூதுராக நம்பிக்கை கொண்டிருந்தார். சர் வில்லியம் முயரும் ஸ்பிரிங்கருடைய இந்தக் கருத்தை முழுமையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

ஹஸ்ரத் ஹதீஜா (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), மற்றும் ஸைது பின் ஹாரிஸா ஆகியோருக்கு பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தப்லீக் மூலமாக ஐந்து நபர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஈமான் கொண்டார்கள். அவர்கள் அனைவரும் இஸ்லாத்தில் எப்படிப்பட்ட கம்பீர மிக்க, உயர்ந்த அந்தஸ்து கொண்ட சஹாபிகளாக திகழ்ந்தார்கள் என்றால், அவர்கள் மாபெரும் சஹாபிகளில் கணக்கிடப்பட்டார்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

1) ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி), 2) அப்துர் ரஹ்மான் பின் அஃப் 3) ஸஅது பின் அபீ வகாஸ் 4) ஜுபைர் பின் அவ்வாம் 5) தல்ஹா பின் உபைதில்லாஹ். இந்த ஐந்து சஹாபிகளும் (சுவர்க்கத்திற்கான) நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய நாவினால் குறிப்பாக சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய அந்த பத்து சஹாபிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் மிகவும் நெருங்கிய சஹாபிகளாகவும், நற்செய்தி வழங்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

(மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல்-ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 121-123)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஜமாஅத்திடம் பொருள் தியாகம் செய்வதற்கு கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் அதனை இந்த சம்பவத்துடன் இவ்வாறு இணைத்தார்கள். அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: நம்பிக்கையாளர் இதுபோன்ற திட்டங்களின் பதற்றமடைவது இல்லை. அதாவது பொருள் தியாகம் செய்தல் அல்லது தியாகத்திற்கு கூறப்படும்போது (பதற்றமடைவது இல்லை). மாறாக, அவர் மகிழ்ச்சியடைகின்றார். மேலும் திட்டம் முதன் முதலில் என்னை வந்தடைந்துவிட்டது என்று அவர் பெருமிதம் கொள்கின்றார். அவர் அஞ்சுவது இல்லை. மாறாக அவர் பெருமைபடுவார். மேலும், இறைவனுக்கு அவர் நன்றி செலுத்துவார். மேலும், அவர் மிக அதிகமாக அவனுடைய வழியில் தியாகம் செய்கின்றார். மேலும் அனைவரையும் விட அவருக்கு அதிக அந்தஸ்தையும் பெறுகின்றார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னென்ன தியாகங்கள் செய்தார்களோ? அல்லது எந்தெந்த தொண்டுகளுக்கு அன்னாருக்கு வாய்ப்பு கிடைத்ததோ, அது தொடர்பாக தமக்கு ஏன் எல்லாரையும் விட முதலில் இந்த தியாகங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது? என்று அன்னார் எண்ணம் கொண்டார்கள் என எவராது கூற முடியுமா? அன்னார் மிக மகிழ்ச்சியுடன் தம்மை அந்த அபாயங்களில் ஆழ்த்திக் கொண்டார்கள். மேலும், இறைவனின் வழியில் அவர்கள் துன்பங்களை சுமந்தார்கள். எனவேதான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பெறமுடியாத அந்தஸ்தை அன்னார் பெற்றார்கள். ஏனெனில் யார் முதலில் ஈமான் கொள்கின்றாரோ அவருக்கு மிக அதிகமாக தியாகங்கள் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. உள்ளபடியே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈமான் கொண்ட காலத்திலும் அபாயங்கள் இருந்தன. துன்பங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. தொழுகைகளை நிறைவேற்ற (நிராகரிப்பாளர்கள்) அனுமதிக்கவில்லை. சஹாபிகள் தமது நாடுகளிலிருந்து வெளியேற்றபட்டு வந்தார்கள். முதலில் ஹிஜ்ரத் அபிசீனியா நிகழ்ந்தது. அவர்கள் ஈமான் கொண்ட வெகு காலத்திற்கு பிறகு முன்னேற்றங்களின் காலம் ஆரம்பமானது. ஆனால், ஆரம்ப காலத்தில் ஈமான் கொண்டது மற்றும் துவக்க காலத்தில் தியாகங்களுக்கான சந்தர்ப்பம் கிடைத்தது போன்ற காரணங்களினால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த அந்தஸ்து கிடைத்தது. மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் அன்னாருடன் தம்மை அந்த அந்தஸ்தில் சமப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகவே ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்ட போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எந்த நேரத்தில் இஸ்லாத்தை நிராகரித்துக் கொண்டிருந்தீர்களோ அந்த நேரத்தில் அபூபக்ர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். மேலும், நீங்கள் இஸ்லாத்தை எதிர்த்து கொண்டிருந்தீர்கள். அவர் இஸ்லாத்திற்கு உதவி செய்தார். தற்போது நீங்கள் ஏன் அவருக்கு துன்பம் கொடுக்கின்றீர்கள்?

ஆக, அன்னார் முதலில் ஈமான் கொண்டது மற்றும் அன்னாரின் தியாகங்களைக் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். உண்மையில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் துன்பங்களையும் சுமந்தார்கள். அன்னார் தியாகங்களையும் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த முதன்மையில் பெருமிதம் கிடைத்துள்ளது.

அந்தோ! மக்கா வெற்றியின்போது தமக்கு ஈமான் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்க வேண்டுமே! என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விரும்பியிருந்தார்கள் என்று எவராவது கூறமுடியுமா? (முடியாது) இன்னும் கூறப்போனால், உலகியல் அரசாட்சிகள் அன்னாருக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தாலும் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை மிகவும் இழிவான பரிசாக கருதியிருப்பார்கள். மேலும் அதனை ஒப்புக் கொண்டிருக்கவும் மாட்டார்கள். இன்னும் கூறப்போனால் அன்னார் (தமக்கு

கிடைத்த) அந்தஸ்துகளுக்கு பகரமாக உலகியல் அரசாட்சிகளை கால்களால் எட்டி உதைப்பதற்கும் தயங்கி இருக்க மாட்டார்கள். (அன்வாருல் உலூம், தொகுதி 9, மன் அன்சாரி இலல்லாஹ், பக்கம்-30-31)

அடிமைகளை விடுதலை செய்தது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது.

أَبُوْبَكْرٍ سَيِّدُنَا وَأَعْتَقَ سَيِّدَنَا يَعْنِيْ بِلَالًا

என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். (ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண்: 3754)

பொருள்: அபூபக்ர் நமது தலைவர் ஆவார்கள். அன்னார் நமது தலைவரை விடுதலை செய்தார்கள். அன்னார் கூறியதன் பொருள் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆவார்கள். ஹஸரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் தமது செல்வத்தின் மூலம் ஏழு அடிமைகளை விடுதலை செய்ய வைத்தார்கள். அந்த அடிமைகளுக்கு அல்லாஹ்வின் காரணமாக துன்பம் கொடுக்கப்பட்டு வந்தது. அந்த அடிமைகளின் பெயர்கள் இவ்வாறாகும்: ஹஸ்ரத் பிலால் (ரலி), ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி), ஸின்னைரா (ரலியல்லாஹூ அன்ஹா), நஹ்தியா (ரலியல்லாஹூ அன்ஹா) மற்றும் அன்னாரின் மகள் (ரலியல்லாஹூ அன்ஹா), அன்னாரின் மகள் பனீ முஅம்மல் கோத்திரத்தின் ஓர் அடிமைப் பெண், உம்மே உபையஸ் (அல்அஸாபா ஃபீ தம்மீஸ் அஸ்ஸஹாபா, தொகுதி 3, பக்கம் 247, அப்துல்லாஹ் பின் உஸ்மான், தாருல் ஃபிக்ர், பெய்ரூத் 2001)

எதிரிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்மை மற்றும் நல்லொழுக்கத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

அபூபக்ர் போன்ற மனிதருக்கு முழு மக்காவும் நன்றி கடன்பட்டிருந்தது. அன்னார் சம்பாதித்தவற்றை அடிமைகளை விடுதலை செய்வதற்காக செலவிட்டு வந்தார்கள். அன்னார் (ரலி) ஒருமுறை மக்காவை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அந்நிலையில் மக்கத்து தலைவர் ஒருவர் வழியில் அன்னாரை சந்தித்தார். மேலும் அபூபக்ரே! நீர் எங்கே செல்கின்றீர்? என்று கேட்டார். அதற்கு, இந்த நகரத்தில் தற்போது எனக்கு பாதுகாப்பில்லை. எனவே வேறோர் இடத்திற்கு செல்கிறேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அந்த தலைவர் கூறினார்: உம்மைப் போன்ற நல்ல மனிதர்கள் இந்த நகரத்தை விட்டு வெளியேறிவிட்டால் பின்னர் இந்த நகரம் அழிந்து விடும். நான் உமக்கு அடைக்கலம் தருகிறேன். நீர் நகரத்தை விட்டு செல்ல வேண்டாம்.

அன்னார் (ரலி) அவருடைய பாதுகாப்பின் கீழ் திரும்பிச் சென்றார்கள். அன்னார் (ரலி) காலையில் எழுந்து திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். அதனால் பெண்களும், குழந்தைகளும் சுவர்களில் காதுகளை வைத்து மிகவும் ஆர்வத்துடன் திருக்குர்ஆனை கேட்டு வந்தனர். ஏனெனில் அன்னாரின் குரலில் மிகவும் உருக்கமும், வேதனையும் இருந்தது. திருக்குர்ஆன் அரபியில் இருந்ததால் ஒவ்வொரு பெண்ணும், ஆணும், பிள்ளையும் அதன் பொருளை புரிந்து வந்தனர். செவியேற்பவர்கள் அதனால் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி வந்தனர். இந்த விஷயம் பரவியபோது, இவ்வாறு தொடர்ந்தால் அனைவரும் மார்க்கம் அற்றவர்களாக ஆகிவிடுவார்கள் என்ற சர்ச்சை மக்காவில் ஏற்பட்டது. இறுதியில் மக்கள் அந்த தலைவரிடம் சென்று, நீங்கள் அவரை உங்களது அடைக்கலத்தின் கீழ் ஏன் வைத்துள்ளீர்கள்? என்று கேட்டனர்.

அந்த தலைவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, நீங்கள் திருக்குர்ஆன் ஓதாதீர்கள். மக்கா வாசிகள் அதனால் கோபம் அடைகின்றனர் என்று கூறினார்.

“அப்படியென்றால் நீங்கள் உங்களது அடைக்கலத்தை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள். என்னால் இதிலிருந்து விலகியிருக்க முடியாது” என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆக, அந்த தலைவர் தனது அடைக்கலத்தை திரும்ப பெற்றுக் கொண்டார். இது அன்னாருடைய இறையச்சம் மற்றும் தூய்மைக்கு எத்துனை வலிமையான சான்றாகும்! அந்த மக்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கடும் எதிரிகளாக இருந்தனர். அன்னாரை அவர்கள் ஏசி பேசியும் வந்தனர். ஆனால், அபூபக்ர் (ரலி) அவர்களின் பரிசுத்த தன்மையை அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தார்கள். எனவேதான் தாங்கள் வெளியேறினால் நகரம் அழிந்து விடும் என்று அந்த தலைவர் கூறினார். (தஃப்ஸீர் கபீர் தொகுதி 10, பக்கம் 327)

தொழுகையில் இமாமத் தொடர்பாக வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் எந்த நபர்களுக்கு மஸ்ஜித் நபவிய்யில் தொழ வைப்பதற்கு நற்பேறு கிடைத்ததோ அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் (ஒருவர்) ஆவார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறுதி நாட்களில் அதிலும் குறிப்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறப்பு வழிகாட்டலுக்கேற்ப அன்னாருக்கு தொழுகை நடத்துவதற்கான நற்பேறு கிடைத்தது என்பதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு தனிச்சிறப்பான நற்பேறாகும். இது தொடர்பாக பலதரப்பட்ட அறிவிப்புகள் உள்ளன.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எந்த மக்களுக்கு மத்தியில் அபூபக்ர் இருக்கின்றாரோ, அவர்களுக்கு அவரைத் தவிர வேறு ஒருவர் இமாமத் செய்வது (அந்த மக்களுக்கு) உகந்ததல்ல. (சுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 3673)

அஸ்வத் அறிவிக்கின்றார்: நாங்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹூ அன்ஹா) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தோம். இதற்கிடையில் நாங்கள் தொழுகையை பேணுவது மற்றும் அதன் மகத்துவம் ஆகியவற்றை குறிப்பிட்டோம். அப்போது அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாம் மரணித்த அந்த நோயில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது தொழுகைக்கான நேரம் வந்தது. மேலும், பாங்கு கொடுக்கப்பட்டது. அப்போது, அபூபக்ரை மக்களுக்கு தொழுகை நடத்தும்படி அவரிடம் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூபக்ர் மென்மையான இதயம் படைத்தவர் ஆவார். தங்களுடைய இடத்தில் அவர் நிற்கும்போது அவரால் மக்களுக்கு தொழ வைக்க முடியாது என்று அன்னாரிடம் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் அதையே கூறினார்கள். அவர் மென்மையான இதயம் படைத்தவர் ஆவார் என்று மீண்டும் அன்னாரிடம் கூறப்பட்டது. அப்போது, மூன்றாவது முறையாக அன்னார் (ஸல்) அதையே மீண்டும் கூறினார்கள். மேலும், நீங்கள் யூசுஃப் இடம் இருந்த பெண்களைப் போன்றவர்கள். அதாவது, அவர்களை போன்று பேசுகின்றீர்கள். அபூபக்ரை மக்களுக்கு தொழ வைக்கும்படி அவரிடம் நீங்கள் கூறுங்கள் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொழ வைப்பதற்காக புறப்பட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது உடல் நலத்தில் சிறிது முன்னேற்றத்தை உணர்ந்தார்கள். எனவே அன்னார் (ஸல்) (தொழுகைக்காக) புறப்பட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) இரண்டு நபர்களின் உதவியுடன் அழைத்து வரப்பட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு இது எந்த அளவு நினைவில் உள்ளதென்றால், அன்னார் (ஸல்) அவர்களின் பாதங்கள் நோயின் காரணமாக நிலத்தில் கோடுகளை கிழித்துக் கொண்டிருந்ததை நான் இன்றும் காண்கின்றேன். அதாவது அன்னாரால் சரியாக நடக்க முடியாமல் இருந்தது. பாதங்களை எடுத்து வைக்க முடியவில்லை. எனவே நிலத்தில் பாதங்கள் தேய்த்துக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இவ்வாறு வருவதைக் கண்ட உடன் பின்னால் விலகுவதற்கு விரும்பினார்கள். ஆனால், உங்களது இடத்திலேயே இருங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சைகை செய்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். எந்த அளவிற்கு என்றால் அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழ வைத்தார்களா? மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அன்னாரை பின்தொடர்ந்து தொழுதார்களா? மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தொழுகையை பின் தொடர்ந்து மக்கள் தொழுது கொண்டிருந்தார்களா? என்று அஃமஷ் அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது அன்னார் தலையால் ஆம் என்று சைகை செய்தார்கள். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய வலது பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நின்று கொண்டு தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் அஸான், ஹதீஸ் எண்: 664)

அறிவிப்பாளர் கூறுகிறார்கள் : ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அன்சாரி (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றினார்கள். மேலும் தொண்டாற்றினார்கள். மேலும், அன்னாரின் தோழமையில் இருந்தார்கள். பின்னர் கூறினார்கள்: எந்த நோயினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்களோ அந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தபோது அந்த மக்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொழ வைத்து வந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், திங்கட்கிழமை வந்தது. மேலும், அன்னார் தொழுகையில் ஸஃப்பில் இருந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறையின் திரையை

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 08-15 December 2022 Issue No. 49&50

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அகற்றினார்கள். அன்னார் (ஸல்) எங்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) எழுந்து நின்றார்கள். அப்போது அன்னாரின் அருளுக்குரிய முகம் திருக்குர்ஆனின் பக்கத்தை போன்று இருந்தது. பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியடைந்து புன்சிரித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை (தொழுகையில்) பார்த்ததன் காரணமாக நாம் சோதனைக்குள்ளாகிவிட்டோம் என்று நாங்கள் எண்ணினோம். இதற்கிடையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸஃப்பில் இணைந்து கொள்வதற்காக தனது குதிகால்களால் பின்னால் விலகினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக வெளியில் வருகை தந்து கொண்டிருக்கின்றார்கள் என்று அன்னார் கருதினார்கள். ஆனால், உங்களது தொழுகையை முழுமை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சைகையில் கூறினார்கள். பின்னர் திரையிட்டுக் கொண்டார்கள். மேலும் அந்த நாளிலேயே அன்னார் (ஸல்) மரணமடைந்து விட்டார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் அஸான், ஹதீஸ் எண்: 680)

மற்றோர் அறிவிப்பில் வருகிறது. அதே நாட்களில் ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். அதன் விவரம் இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸம்ஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடுமையாக நோயுற்றிருந்தபோது நானும், முஸ்லிம்களின் ஒரு கூட்டமும் அன்னாருக்கு தொண்டாற்றுவதில் ஈடுபட்டிருந்தோம். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தொழுகைக்காக அழைத்தார்கள். அப்போது யாரையாவது தொழுகை நடத்தும்படி கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸம்ஆ (ரலி) அவர்கள் வெளியே சென்றார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுள் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு இல்லை.

கூறுகின்றார்கள்: உமரே! எழுந்திருங்கள். மேலும், மக்களுக்கு தொழுகை நடத்துங்கள் என்று நான் கூறினேன். அன்னார் முன்னால் சென்றார்கள். மேலும், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரின் குரலைக் செவிமடுத்தார்கள். (ஹஸ்ரத் உமருடைய குரல் உரத்த குரலாக இருந்தது.)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ர் எங்கே இருக்கின்றார்? அல்லாஹ் அதனை நிராகரிக்கின்றான். மேலும் முஸ்லிம்களும், அல்லாஹ்வும் அதனை நிராகரிக்கின்றனர்.

அன்னார் (ஸல்) அபூபக்ரை அழைத்து வர அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்தி முடித்த பிறகு அன்னார் (ரலி) வந்தார்கள். பின்னர் அன்னார் மக்களுக்கு தொழுகை நடத்தினார்கள். இதுவும் ஓர் அறிவிப்பாகும்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலைக் கேட்டதும் வெளியில் வருகை தந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னார் (ஸல்) தமது அருளுக்குரிய தலையை தமது அறையிலிருந்து உயர்த்திக் காட்டினார்கள். பின்னர், இல்லை! இல்லை! இல்லை! இப்னு அபீ கஹாஃபா மக்களுக்கு தொழுகை நடத்த வேண்டும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அன்னார் (ஸல்) இதனை கோபத்துடன் கூறினார்கள். (சுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 4660-4661)

இந்த ஹதீஸுடைய கூடுதல் விளக்கங்கள் முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல் (எனும்) ஹதீஸ் நூலில் இவ்வாறு கிடைக்கின்றது: அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது, தாங்கள் தொழ வையுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறிய ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸம்ஆ (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்:

என்னை தொழ வைக்கும்படி உங்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நான் புரிந்து கொண்டேன். இல்லையென்றால் நான் ஒருபோதும் தொழ வைத்திருக்க மாட்டேன். அதற்கு, இல்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) தென்படாதபோது அன்னாருக்கு பிறகு தாங்களே தொழ வைப்பதற்கு தகுதியானவர் என்று நானே சுயமாக புரிந்து கொண்டேன். எனவே, நான் சுயமாக தங்களிடம் தொழுகை நடத்தும்படி கேட்டுக் கொண்டேன். என்னிடம் நேரடியாக கூறப்படவில்லை என்று அவர் அதாவது ஹஸ்ரத் ஸம்ஆ (ரலி) கூறினார்கள். இது முஸன்னதுடைய அறிவிப்பாகும். (முஸன்னத் அஹ்மத் பின் ஹன்பல் தொகுதி 6, பக்கம் 412-413, ஹதீஸ் எண்: 19113, ஆலிமுல் குதுப் பெய்ரூத் 1998)


அன்னாரின் அன்பிற்குரிய பிள்ளைகள் மீது பரிவு காட்டியது குறித்து எழுத்தாளர்கள் எழுதுகின்றனர். ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தமது பிள்ளைகள் மீது மிகவும் அன்பு இருந்தது. அன்னார் தமது சொல்லாலும், செயலாலும் அதனை பெரும்பாலும் இந்த விஷயத்தை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தார்கள். மூத்த புதல்வர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் தனி வீட்டில் வசித்து வந்தார்கள். ஆனால், (அந்த) வீட்டிற்கான செலவீனங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது பொறுப்பில் வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூத்த புதல்வி ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களுடன் நிகழ்ந்திருந்தது. அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) தொடக்கத்தில் மிகவும் கஷ்டத்தில் இருந்தார்கள். வீட்டில் ஓர் ஊழியரையோ அல்லது பணிப் பெண்ணையோ வைத்துக் கொள்வதற்கு வசதி இல்லாமல் இருந்தது. எனவே ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு மிக அதிகமாக வேலை செய்ய நேரிட்டது. அன்னார் மாவு அரைத்து வந்தார்கள். உணவு சமைத்து வந்தார்கள். தண்ணீர் நிறைத்து வந்தார்கள். மிக தொலைவிலிருந்து பேரீத்தம் பழக் கொட்டைகளை தலையில் சுமந்து சுமந்து வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், குதிரைக்கு தீனி கொடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அன்னாரின் நிலைமையைக் குறித்து தெரிய வந்தபோது, அன்னார் ஓர் ஊழியரை அனுப்பி வைத்தார்கள். அவர் குதிரைகளுக்கு தீனி வழங்கி வந்தார். மேலும், அதனை பராமரித்து வந்தார். எனது தந்தையார் ஊழியரை அனுப்பி ஒரு வகையில் என்னை (பணிச் சுமையிலிருந்து) விடுதலை செய்துவிட்டார்கள் என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுன் நிக்காஹ், பாபுல் கய்ரா, ஹதீஸ் எண்: 5224)

மற்றொரு சம்பவம் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் (ரலி) அவர்களுக்கு தமது மனைவி ஆதிகா மீது அன்பு இருந்தது. அவரின் காரணமாக அன்னார் ஜிஹாதிற்கு செல்வதை விட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் இந்த விஷயத்தை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, நீங்கள் மனைவியின் காரணமாக ஜிஹாதிற்கு செல்வதை தவிர்த்திருந்தால் அவருக்கு மண விலக்கு கொடுத்து விடுங்கள் என்று

இதன் தொடர்ச்சி - 9ம் பக்கம்

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad